ORIGINAL
# IDEAL
Published since 1978 with Repute

# 10

# பொதுத்தமிழ்

## 12 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்

- அரசு மாதிரி வினாத்தாள் 2019
- கங்கா -வின் மாதிரி வினாத்தாள்கள்
- அனைத்து 1 - 28 வினாக்களுக்கான விடைகள்


**SRI GANGA PUBLICATIONS**®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627001.**
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
**Chennai - 600 083.**
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

**Website : www.suryapublications.in**

**Price : ₹ 50**

ORIGINAL IDEAL

Published since 1978 with Repute

# OUR BANK DETAILS

## TIRUNELVELI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **446971431** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000T034** |
| Branch Name | : | **TIRUNELVELI JUNCTION** |

| | | |
|---|---|---|
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **510909010051752** |
| Bank Name | : | **CITY UNION BANK** |
| IFSC Code | : | **CIUB0000230** |
| Branch Name | : | **PALAYAMKOTTAI** |

## CHENNAI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **SRI GANGA PUBLICATION** |
| Account Number | : | **928507483** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000A031** |
| Branch Name | : | **ASHOK NAGAR** |

| | | |
|---|---|---|
| Account Name | : | **SRI GANGA PUBLICATION** |
| Account Number | : | **512020010022514** |
| Bank Name | : | **CITY UNION BANK** |
| IFSC Code | : | **CIUB0000230** |
| Branch Name | : | **PALAYAMKOTTAI** |

# 10 ஆம் வகுப்பு

## ● அரசு மாதிரி வினாத்தாள் - 2019-20 ●

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. பரிபாடல் அடியில் ‘விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?**

அ) வானத்தையும் பாட்டையும்
ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும்
ஈ) வானத்தையும் பேரொலியையும்

**2. ‘‘மருந்தே ஆயினும் விருந்தொடு உண்’’ என்னும் தொடர் இடம்பெற்ற நூல் ......................**

அ) கொன்றைவேந்தன் ஆ) குறுந்தொகை
இ) திருக்குறள் ஈ) நற்றிணை

**3. ‘‘இங்கு நகரப் பேருந்து நிற்குமா?’’ என்று வழிப்போக்கர் கேட்டது ...................... வினா.**
**‘‘அதோ அங்கே நிற்கும்’’ என்று மற்றொருவர் கூறியது ...................... விடை.**

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல்
ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை
ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**4. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி ......................**

அ) ஜால்ரா ஆ) பறை
இ) உறுமி ஈ) நாகசுரம்

**5. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' - இவ்வடி குறிப்பிடுவது ......................**

அ) காலம் மாறுவதை
ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை
ஈ) வண்ணம் பூசுவதை

**6. காற்றின் மெல்லிய ...................... பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான ...................... பூக்களை மாலையாக்குகிறது.**

**தொழிற்பெயர்களைப் பொருத்தித் தொடர்களை முழுமை செய்க.**

அ) தொடுத்தல், எடுத்தல் ஆ) தொடுதல், தொடுத்தல்
இ) எடுத்தல், தொடுதல் ஈ) தொடுத்தல், தொடுதல்

**7. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம்

**8. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.**

அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை - நல்வினை, தீவினை

ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை

இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்

ஈ) குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல் - பனை திணை

9. **'கேள்வியினான்' என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு**

அ) வினையாலணையும் பெயர்

ஆ) தொழிற்பெயர்

இ) வினைத்தொகை

ஈ) பண்புத்தொகை

10. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்**

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர்

11. **<u>''காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்''</u> நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.**

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் ஓலையும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

''நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''

12. **இப்பாடலின் ஆசிரியர்**

அ) ஔவையார் ஆ) நப்பூதனார்

இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

**13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்**

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல்

இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

**14. 'நனந்தலை உலகம்' - இத்தொடரின் பொருள்?**

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம்

இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**

அ) பாடுஇமிழ், கோடுகொண்டு

ஆ) கோடுகொண்டு, பெரும்பெயல்

இ) நனந்தலை, வலம்புரி

ஈ) பொறித்த, பொழிந்த

**பகுதி - II (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4×2=8

16. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

ஆ. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?

18. 'நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

19. "மன்னனும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"

– ஐம்பெருங்காப்பியங்களுள் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள இருகாப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

20. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது?

21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)

23. **பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| தோற்பாவை, விருது, தோற்பவை, விருந்து |

அ) வாழ்க்கையில் ...................... மீண்டும் வெல்லும் - இதைத் தத்துவமாய்த் ...................... க் கூத்து சொல்லும்.

ஆ) தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே ...................... அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் ......................

24. **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

சிறு – சீறு

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Modern Literature

ஆ) Epic Literature

26. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

27. **பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவர்கள் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. 'அறியேன்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.

30. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் கூறு ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாகக் குறிப்பிடுக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ) விருந்தினர் என்போர் யாவர்?

ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2×3=6**

32. "உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

(அல்லது)

"வாளால் அறுத்துச் சுடினும்" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

35. "கண்ணே கண்ணுறங்கு!

காலையில் நீயெழும்பு!

மாமழை பெய்கையிலே!

மாம்பூவே கண்ணுறங்கு!

பாடினேன் தாலாட்டு!

ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!"

– இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர் வகைகளை எழுதுக.

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் –இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தன்மை அணி குறித்து எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின்விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பில், மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.

42. அ) தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

| |
|---|
| பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark, The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies

dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்தஇளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரைநகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

–கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) கு. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

45. அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து இவற்றையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். –இக்கருத்துகளைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) **குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை.

## விடைக் குறிப்புகள்

1. ஈ) வானத்தையும் பேரொலியையும்
2. அ) கொன்றை வேந்தன்
3. இ) அறியாவினா, சுட்டுவிடை
4. ஆ) பறை
5. இ) இடையறாது அறப்பணிச் செய்தலை
6. ஆ) தொடுதல், தொடுத்தல்
7. இ) உருவகம்
8. ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை
9. அ) வினையாலணையும் பெயர்
10. ஈ) கலவைத்தொடர்
11. ஈ) சருகும் சண்டும்
12. ஆ) நப்பூதனார்
13. இ) முல்லைப்பாட்டு
14. ஈ) அகன்ற உலகம்
15. அ) பாடுஇமிழ், கோடுகொண்டு
16. அ) நாட்டு மக்களின் அறிவொழுக்கம் எதன் அடிப்படையில் அமையும்?

    ஆ) கன்னியாகுமரி எந்த ஆண்டு தமிழ்நாட்டுடன் இணைந்தது?
17. நடுநிலையாக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுவருக்கு இவ்வுலகம் உரிமையாகும்.
18. • மரம் வளர்ப்போம்! மாசற்றக் காற்றைப் பெறுவோம்!!

    • மரமின்றி மாசில்லாக் காற்றில்லை!
19. சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.
20. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை, வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு.

21. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்.

22. அண்ணன் நேற்று வீட்டிற்கு **வந்தான்**. அண்ணன் புறப்படும்போது அம்மா **வழியனுப்பினாள்**.

23. அ) தோற்பவை, தோற்பாவை

ஆ) விருது, விருந்து

24. சிறு பொந்துக்குள் இருந்து பாம்பு சீறுவதைக் கண்டேன்.

25. நவீன இலக்கியம், காப்பிய இலக்கியம்

26.

| **தொழிற்பெயர்** | **வினையாலணையும் பெயர்** |
|---|---|
| வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |
| படர்க்கைகே உரியது. | மூவிடத்திற்கும் உரியது. |
| **எ.கா.** பாடுதல், படித்தல் | **எ.கா.** பாடியவள், படித்தவர். |

27. சேரனின் பட்டப்பெயர்களில் 'கொல்லி வெற்பன்' 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'கொல்லிமலையை' வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. **அறியேன் - அறி + ய் + ஆ + ஏன்**

**அறி** - பகுதி;
**ய்** - உடன்படு மெய் சந்தி;
**ஆ** - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது;
**ஏன்** - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

# மாதிரி வினாத்தாள் - 1

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. பொருத்துக.**

1. கொண்டல் - i) மேற்கு
2. கோடை - ii) தெற்கு
3. வாடை - iii) கிழக்கு
4. தென்றல் - iv) வடக்கு

அ) 1-i 2-ii 3-iii 4-iv ஆ) 1-iii 2-i 3-iv 4-ii

இ) 1-iv 2-iii 3-ii 4-i ஈ) 1-iii 2-iv 3-i 4-ii

**2. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த ‘பா’ வினம் ......................**

அ) அகவற்பா ஆ) வெண்பா

இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ...................... வேண்டினார்.**

அ) கருணையன் எலிசபெத்துக்காக

ஆ) எலிசபெத் தமக்காக

இ) கருணையன் பூக்களுக்காக

ஈ) எலிசபெத் பூமிக்காக

4. **புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தேடுக்க:**
**தவழும்போது ஒரு பெயர்**
**விழும்போது ஒரு பெயர்**
**உருளும்போது ஒரு பெயர்**
**திரண்டோடும்போது ஒரு பெயர்**
**...................... அவை என்ன?**

அ) நீர், மழை, ஆறு, ஓடை

ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்

இ) மாரி, கார், நீர், பூனல்

ஈ) மழை, புனல், மேகம், நீர்

5. **பெப்பர் என்னும் இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு ......................**

அ) அமெரிக்கா ஆ) இந்தியா

இ) சீனா ஈ) ஜப்பான்

6. **பதினென்கீழ்க்கணக்கு நூல்கள், நாலடியார் - இவ்விலக்கியங்களுக்குள் இருக்கும் தமிழெண்களைக் கண்டறிக.**

அ) க0, சு ஆ) கஅ, சு

இ) சு, கக ஈ) சு, கஅ

7. **மாணவர்க்கு ஒழுக்கம், மாணவரது ஒழுக்கம் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ......................**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

8. **'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ......................**

அ) வணிகக் கப்பல்களும், ஐம்பெருங் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும், பெரும் கலன்களும்

இ) ஐம்பெருங் காப்பியங்களும், அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும், அணிகலன்களும்

**9. சங்க காலத்தில் வரகு, சாமை போன்ற சிறு தானியங்கள் எந்த நிலத்தில் உணவாக உட்கொள்ளப்பட்டன?**

அ) முல்லை ஆ) குறிஞ்சி

இ) பாலை ஈ) மருதம்

**10. ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' - இப்பழமொழி உணர்த்தும் பொருள்**

அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டு விடும்.

ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.

இ) காலம் வரும் வரை முயன்று கொண்டே இருக்க வேண்டும்.

ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும்.

**11. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே**

அ) திருப்பதியும் திருத்தணியும்

ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும்

ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருந்துவதும் கல்வியென்றே போற்று.

**12. இப்பாடலில் இடம்பெற்றுள்ள சீர் எதுகைகளை எழுதுக.**

அ) அருளை, பெருக்கி

ஆ) மருளை, அருளை

இ) பொருந்துவதும், போற்று

ஈ) அருளை, அகற்றி

**13. அருந்துணையாய் - இச்சொல்லைப் பிரித்தால் ......................**

அ) அருந் + துணையாய்

ஆ) அருந்துணை + யாய்

இ) அருமை + துணையாய்

ஈ) அருள் + துணையாய

**14. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ......................**

அ) நாலடியார் ஆ) முல்லைப்பாட்டு

இ) மெய்க்கீர்த்தி ஈ) நீதிவெண்பா

**15. இப்பாடலின் ஆசிரியர் ......................**

அ) கீரந்தையார்

ஆ) பரஞ்சோதிமுனிவர்

இ) கா.ப செய்குதம்பிப் பாவலர்

ஈ) பெருங்கௌசிகனார்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

## பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4×2=8

16. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

17. பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார் குறித்து எழுதுக.

18. ‘சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்
– இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

20. **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

அ) செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

ஆ) திறன்பேசிகளில் இயங்கும் உதவும் மென்பொருள், நாம் படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்.

21. 'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**5×2=10**

22. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்"
- இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

23. அ) 'அம்மா சொன்னார்' என்னும் எழுவாய்த் தொடருக்கான விளித்தொடரை எழுதுக.

ஆ) 'வந்த குழந்தை' என்னும் பெயரச்சத் தொடருக்கான வினையெச்சத் தொடரை எழுதுக.

24. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறான்.

- இத்தொடர் காலவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

25. **கலைச்சொல் தருக.**

அ) Modern Literature

ஆ) Epic Literature

26. **தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.**

அ) அழைப்பு மணி ஒலித்ததும், கயல்விழி கதவைத் திறந்தாள்.

ஆ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்களின் பேச்சுத் தடைப்பட்டது.

27. 'கிளர்ந்த' பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. சொற்களில் மறைந்துள்ள தொகையை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க:

அ) கீரிபாம்பு ஆ) இன்சொல்

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி, மொழி வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு உதவுகிறது என்பதை நிறுவுக.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டுத் தருக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குக் கற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

அ) சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துகாட்டுபவை எவை?

ஆ) எவற்றின் எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?

இ) நிகழ்கலைகள் மக்களுக்கு எதைக் கொடுத்து, எதைப் போக்குகின்றன?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34 - ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 2×3=6

32. ''காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களை எழுதுக.

33. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை, உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து<br>முறியும்<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்<br>வாசலில் மரணம்<br>நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்<br>**- நவீன கவிதை** | கையாலே பூவெடுத்தா –<br>மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா –<br>மாரிக்கு<br>வெம்பி விடுமென்று<br>சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு –<br>மாரிக்குத்<br>தாங்கி மலரடுத்தார்.<br>**-நாட்டுப்புறப் பாடல்** |

34. **அடிபிறழாமல் எழுதுக.**

''அன்னை மொழியே'' எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

**(அல்லது)**

''தூசும் துகிரும்'' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**


ஆ) முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலைப் பற்றி விவரிக்க.

39. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரின் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) தங்கைக்குத் திறன்பேசிப் பயன்பாட்டினால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் குறிப்பிட்டு அறிவுரைக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.



41. **படிவத்தை நிரப்புக:**

நூலக உறுப்பினர் படிவம்.

42. அ) வீட்டிலும், பள்ளியிலும் நீங்கள் நடந்து கொள்ளும் விதங்கள் ஐந்தினைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

| | | |
|---|---|---|
| Malar | : | Devi, Switch off the lights when you leave the room |
| Devi | : | Yeah. We have to save electricity. |
| Malar | : | Our nation spends a lot of electricity for lighting up our streets in the night. |
| Devi | : | Who knows? In future our country may launch artificial moons to light our night time sky. |
| Malar | : | I have read some other countries are going to launch these types of Illumination Satellites near future. |
| Devi | : | Super news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power! |

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) எதற்காகஎழுதுகிறேன்? என்று ஜெயகாந்தன் குறிப்பிடும் காரணங்களில் இரண்டினையும். 'இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்' என்பது குறித்து அசோகமித்திரன். கா. செல்லப்பன் இருவரின் கருத்துகளையும் குறிப்பிட்டு எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) "என் மக்கள் அனைவருக்கும் நலம் கிட்டும் எல்லோரும் நலமுடன் வாழ்வார்கள்"– என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்புடைய தன்னலமற்றப் பண்பு கொண்ட உன்னைக் கவர்ந்த ஆளுமை ஒருவரைக் குறித்து எழுதுக.

45. அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை – விசும்பின் துளி – விண்ணின் மழைத்துளி – வான் சிறப்பு – வள்ளுவன் வாய்மொழி – மரம் வளர்போம் – பசும்புல் நுனி – இயற்கையைப் போற்றுவோம் – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) அரசுப் பொருட்காட்சியில் நீங்கள் கண்ட சூழலைக் குறிப்புகளின் உதவியோடு கட்டுரை ஒன்று எழுதுக.

முன்னுரை - அரசுப் பொருட்காட்சி அறிவிப்பு - அமைவிடம் - நிகழ்த்தப் பெற்ற நிகழ்கலைகள் - அங்காடிகள் - பல்துறைக் காட்சிக்கூடங்கள் - பொழுதுபோக்கு விளையாட்டுகள் - பலவித உணவுகள் பெருமித உணர்வு - முடிவுரை.

☯☯☯☯☯

## விடைக் குறிப்புகள்

1. ஆ) 1-iii 2-i 3-iv 4-ii
2. அ) அகவற்பா
3. அ) கருணையன் எலிசபெத்துக்காக
4. ஆ) மேகம், மழைநீர், வெள்ளம்
5. ஈ) ஜப்பான்
6. ஆ) கஅச
7. அ) வேற்றுமை உருபு
8. அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
9. ஆ) முல்லை
10. ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
11. அ) திருப்பதியும் திருத்தணியும்
12. ஆ) அருளை, பெருக்கி
13. இ) அருமை + துணையாய்
14. ஈ) நீதி வெண்பா
15. இ) கா.ப. செய்குதம்பிப் பாவலர்

16. மன்னர் தம் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் காலம் கடந்தும் உணர்த்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக புகழும் பெருமையும் அழியாத வகையில் அவை அனைத்தையும் கல்லில் செதுக்கினார்கள். இதுவே மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கமாகும்.

17. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல்நாடு மலேசியாவே, மாநாட்டுக்குரிய முதல் மொழியும் தமிழே! என்று கூறியவர்.

18. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கிற ஒல்லித் தண்டுகளாகத் குறிப்பிடப்படுவோர் பெண்கள். இவர்கள் அமைதியான முறையில் இவ்வுலகத்தைத் தாங்கி நிறுத்த போராடும் போராளிகள்.

19. வாருங்கள்

அமருங்கள்

நலமா?

நீர் அருந்துங்கள்

20. அ) சில நிமிடங்களில் நோயாளியின் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் கருவியின் பெயர் என்ன?

ஆ) திறன்பேசியில் நாம் படிப்பதற்கு உதவும் மென்பொருள் யாது?

21. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்

தியற்கை அறிந்து செயல்.

22. அ) உடுப்பதூஉம் - இன்னிசை அளபெடை

ஆ) உண்பதூஉம் - இன்னிசை அளபெடை

23. அ) அம்மா சொன்னாரா

ஆ) வந்து சென்றது

24. உறுதித்தன்மை நோக்கி கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

25. அ) நவீன இலக்கியம்

ஆ) காப்பிய இலக்கியம்

26. அ) அழைப்பு மணி ஒலித்ததும் கதவைத் திறந்தார்.

ஆ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றதும் பேச்சு தடைபட்டது.

27. **கிளர்ந்த - கிளர்** + **த(ந்)** + **த்** + **அ**

**கிளர்** - பகுதி

**த்** - சந்தி, (ந்) ஆனது விகாரம்

**த்** - இறந்தகால இடைநிலை

**அ** - பெயரெச்ச விகுதி

28. அ) **கீரி பாம்பு** - உவமைத்தொகை

கீரியும் பாம்பும் போல அண்ணனும் தம்பி சண்டையிட்டுக்கொண்டனர்.

ஆ) **இன்சொல்** - பண்புத்தொகை

வள்ளுவரின் இன்சொல் வாழ்வுக்கு வழி காட்டும்

☯☯☯☯☯

# மாதிரி வினாத்தாள் - 2

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்

ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல்

ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

**2. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம் .......................**

அ) நாட்டைக் கைப்பற்றல்

ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல்

ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**3. ஜெயகாந்தனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினம்**

அ) உன்னைப்போல் ஒருவன்

ஆ) யாருக்காக அழுதான்

இ) சில நேரங்களில் சில மனிதர்கள்

ஈ) ஊருக்கு நூறு பேர்

4. **சந்தக் கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் என்ன?**

அ) சண்முகமணி ஆ) சண்முகசுந்தரம்

இ) ஞானசுந்தரம் ஈ) ஆறுமுகம்

5. **கொழுந்தாடை என்பது யாது?**

அ) நெல், புல் ஆகியவற்றின் கொழுந்து

ஆ) புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து

இ) தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து

ஈ) கரும்பின் நுனிப்பகுதி

6. **தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ......................**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

7. **'யுனிசெப்' என்பது ......................**

அ) பருவநிலை மாறுபாடு

ஆ) சிறுவர் நிதியம்

இ) உலக சுகாதார நிறுவனம்

ஈ) உலக வங்கி நிறுவனம்

8. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ......................**

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

9. **'மூதூர்' என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு**

அ) வினையாலணையும் பெயர்

ஆ) தொழிற்பெயர்

இ) வினைத்தொகை

ஈ) பண்புத்தொகை

10. **காலில் அணியும் அணிகலன் ......................**

அ) சுட்டி, சூழி ஆ) சிலம்பு, கிண்கிணி

இ) குண்டலம், குழை ஈ) வளையல், காப்பு

11. **ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியின் பெயர் ......................**

அ) வாட்சன் ஆ) வேர்டு ஸ்மித்

இ) ஸ்டீவ் ஸ்மித் ஈ) பெப்பர்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உன்னதருளே பார்ப்பன் அடியேனே.

12. **இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**

அ) பெரிய திருமடல் ஆ) பெருமாள் திருமொழி

இ) தேவாரம் ஈ) திருவாசகம்

13. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) திருமங்கை ஆழ்வார் ஆ) ஆண்டாள்

இ) நம்மாழ்வார் ஈ) குலசேகராழ்வார்

14. **பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்கள் யாவை?**

அ) வாளால், மாளாத, மீளாத், ஆளா

ஆ) அறுத்து, ஆளா, அடியேனே

இ) மருத்துவன், மாயத்தால்

ஈ) காதல், கோட்டம்மா

15. **மாயம் - என்பதன் பொருள் யாது?**

அ) விளையாட்டு ஆ) விருப்பம்

இ) விந்தை ஈ) அன்பு

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ. வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக்காற்று.

ஆ. புறஊதாக் கதிர்கள் நேரடியாக உயிரினங்களைத் தாக்குவதால் மிகுந்த துன்பத்தை உயிரினங்கள் அடைகின்றன.

17. "கழிந்த பெருங்கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்''

– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?

18. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.

19. விருந்து பேணுவதற்காக எவற்றையெல்லாம் தலைவன் பணையம் வைத்ததாகப் புறநானூறு கூறுகின்றது?

20. காவடியின் அமைப்புக்கேற்ப அவை எந்தெந்தப் பெயர்களில் அழைக்கப்படுகின்றன?

21. 'அறிவு' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

அ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

ஆ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

23. **சொற்களை இணைத்துப் புதியச் சொற்களை உருவாக்குக.**

தேன், விளக்கு, மழை, வான், பொன், பூ.

24. **எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

நாற்றிசையும் செல்லாத நாடில்லை

ஐந்துசால்பு ஊன்றிய தூண்

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Vowel

ஆ) Consonant

26. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

27. **தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

அ) **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.

ஆ) **பசு**போல் **சாந்தமும் புலி**போல் **தீரமும் யானை** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

28. 'பொறித்த' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

மொழிபெயர்ப்புஎன்பதுஎழுதப்பட்டதைமொழிபெயர்ப்பது. ஆனால் ஒருவர் பேசும் போதே மொழிபெயர்ப்பது, விளக்குவது என்று சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதை காதணிக் கேட்பியில் கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வெளியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தன்முன் உள்ள காதணி கேட்பியை எடுத்து பொருத்திக் கொண்டு அவரவர் மொழியில் புரிந்து கொள்வார்.

அ) மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

ஆ) பார்வையாளர்கள் அவையில் பேசுவோர் உரையை எப்படிப் புரிந்து கொள்கின்றனர்?

இ) மொழிபெயர்ப்பாளர்கள் எங்கு அமர்ந்திருப்பர்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2×3=6**

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

33. “நெய்க்கண் வேவையொடு குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்” இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

“தென்னன் மகளே” எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடல்.

**(அல்லது)**

“சிறுதாம்பு தொடுத்த ” எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

35. **'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது'** இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

36. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று
-இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. நிரல்நிறை அணி - குறித்து எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25**

38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) **காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

கவிஞன் யானோர் காலக் கணிதம்

கருப்படுபொருளை உருப்பட வைப்பேன்!

புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்

பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!

இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்

இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!

ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

**- கண்ணதாசன்**

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரியச் சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளித்திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை எழுதுக.



41. படிவத்தை நிரப்புக.

நூலக உறுப்பினர் படிவம்

42. அ) வாழ்க்கையில் நீங்கள் பின்பற்றும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart **– Nelson Mandela**

2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going **– Rita Mae Brown.**

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) தமிழின் சொல் வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்து தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

45\. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.

அமைதி - வனம் - மனத்தைத் தொட்டது - கொஞ்சம் அச்சம் - ஆனால் பிடித்திருந்தது - இரவில் வீட்டின் அமைதியை விட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில் - இலைகளின் சலசலப்பு - பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் - திடீரென ஆரவார ஓசை - தண்ணீரின் ஓட்டம் - அழகான ஆறு - உருண்டைச் சிறு கூழாங்கற்கள் - இயற்கையின் கண்காட்சி.

**(அல்லது)**

ஆ) வீரமாமுனிவர் பற்றியும் அவர் ஆற்றிய தமிழ்ப்பணியைப் பற்றியும் கட்டுரை வரைக.

☯☯☯☯☯

## விடைக் குறிப்புகள்

1. அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
2. இ) வலிமையை நிலைநாட்டல்
3. இ) சில நேரங்களில் சில மனிதர்கள்
4. அ) சண்முகமணி
5. ஈ) கரும்பின் நுனிப்பகுதி
6. ஈ) சிலப்பதிகாரம்
7. ஆ) சிறுவர் நிதியம்
8. ஈ) பாடல்; கேட்டவர்
9. ஈ) பண்புத்தொகை
10. ஆ) சிலம்பு, கிண்கிணி
11. ஈ) பெப்பர்
12. ஆ) பெருமாள் திருமொழி
13. ஈ) குலசேகராழ்வார்
14. அ) வாளால், மாளாத, மீளாத், ஆளா
15. அ) விளையாட்டு
16. அ) வடக்கிலிருந்து வீசும் காற்றுக்கு என்ன பெயர்?

    ஆ) புறஊதாக் கதிர்களால் ஏற்படும் விளைவுகள் என்ன?
17. கழிந்த பெரும் கேள்வியினான் (மிகுந்த கல்வியறிவு உடையவர்) - **குசேலபாண்டியன்**.

    காதல்மிகு கேண்மையினான் (கபிலரிடம் நட்பு கொண்டவர்) - **இடைக்காடனார்**.
18. தம்மிடமுள்ளப் பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர்.
19. இரும்பினால் செய்யப்பட்ட பழைய வாள், கருங்கோட்டு சீறி யாழ்.

20. மச்சக்காவடி
தேர்க்காவடி
சர்ப்பக்காவடி
பறவைக்காவடி
பூக்காவடி

21. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

22. அ) ஊட்டமிகு உணவு உணடவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

ஆ) நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

23. பொன் விளக்கு, வான்மழை, பூமழை.

24. நாற்றிசையும் செல்லாத நாடில்லை நான்கு ச
ஐந்துசால்பு ஊன்றிய தூண் ஐந்து ரு

25. அ) உயிரெழுத்து
ஆ) மெய்யெழுத்து

26. உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை:
செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை,
சொல்லிசை அளபெடை.

27. அ) **நந்தவனத்தில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேனை** உண்டன.

ஆ) **ஆ**ப்போல் **அமைதியும் வேங்கை** போல் **வீரமும் களிறு** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

28. **பொறித்த** - **பொறி** + **த்** + **த்** + **அ**
**பொறி** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

# மாதிரி வினாத்தாள் - 3

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது .......................**

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**2. விருந்தினரைப் பேணுவதற்கும் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை .......................**

அ) நிலத்திற்கேற்ற விருந்து
ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து
ஈ) உற்றாரின் விருந்து

**3. 'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**4. மொகு சாஸ்ட்டு என்னும் ஜப்பானிய சொல்லின் பொருள் ......................**

அ) பதில் தர மறுக்கிறோம்

ஆ) விடைதர அவகாசம் வேண்டும்

இ) விடைதர முடியாது

ஈ) இரவீந்திரநாத் தாகூர்

**5. மலைபடுகடாம் எத்தனை பாடல் அடிகளைக் கொண்ட நூல்?**

அ) 483 ஆ) 543

இ) 583 ஈ) 643

**6. விளரியாழ் எத்திணைக்கு உரியது?**

அ) குறிஞ்சி ஆ) மருதம்

இ) நெய்தல் ஈ) பாலை

**7. வெட்சிப் பூ இன்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) மல்லிகைப்பூ ஆ) இட்லிப்பூ

இ) சங்குப்பூ ஈ) உன்னிப்பூ

**8. ''செந்தாமரை'' இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**9. உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுவன?**

அ) உவமையை விட உருவகமே

ஆ) உருவகத்தை விட உவமையே

இ) எதுகையை விட மோனையே

ஈ) கேள்வியிலே பதில் இருப்பது போல

**10. காசிக்காண்டம் என்பது ......................**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்.

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்.

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்.

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்.

**11. அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்துச் சிவனடியாருக்கு விருந்து படைத்தவர் யார்? இக்காட்சி இடம்பெறும் நூல் எது?**

அ) சாக்கியநாயனார், பெரியபுராணம்.

ஆ) இளையான்குடி மாறநாயனார், பெரியபுராணம்.

இ) காரைக்கால் அம்மையார், அற்புத திருவந்தாதி.

ஈ) சுந்தரர், திருத்தொண்டத்தொகை.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

தென்னன் மகனே! திருக்குறளின் மாண்புகழே!

இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**12. இப்பாடல் இடம்பெற்ற கவிதைத் தொகுப்பின் பெயர் என்ன?**

அ) பாஞ்சாலி சபதம் ஆ) மலைக்கள்ளன்

இ) கனிச்சாறு ஈ) என் கதை

**13. இப்பாடலின் ஆசிரியர் ......................**

அ) பாரதியார் ஆ) பெருஞ்சித்திரனார்

இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

**14. ''நற்கணக்கே'' என்பது ......................**

அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

ஆ) பதினெண் மேற்கணக்கு நூல்கள்

இ) ஐம்பெருங்காப்பியங்கள்

ஈ) ஐஞ்சிறு காப்பியங்கள்

**15. 'தென்னன் மகன்'' என்பதன் பொருள் யாது?**

அ) சேரன் ஆ) சோழன்

இ) பாண்டியன் ஈ) பல்லவன்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4×2=8

16. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்டத் தொடர்களில் சரியானத் தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையானத் தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

17. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடு.

18. அமைச்சருக்குரிய ஐந்து சிறப்புகள் யாவை?

19. முல்லைப்பாட்டு நூல் குறிப்பு வரைக.

20. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ. பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல் முல்லைப்பாட்டு.

ஆ. முல்லைப்பாட்டைப்பாடியவர்காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகரது மகனாவார்.

21. 'பொருள்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

23. மரபுவழுவமைதிக்குச்சான்றுதந்து அதற்கானகாரணத்தைக் கூறு.

24. உறுவது கூறல் விடை என்றால் என்ன?

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Consulate

ஆ) Guild

26. **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்
2. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

27. பதிந்து– பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. 'எற்பாடு' பிரித்து பொருள் எழுதுக.

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

29. புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது. இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

30. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'! இடஞ்சுட்டி விளக்குக.

31. 16.01.2003 இல் அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் - 107 (STS - 107) விண்ணில் செலுத்தப்பட்டது.இந்த விண்கலத்தில் சாவ்லா உட்பட ஏழு பேர் பயணித்தனர். பதினாறு நாட்கள் ஆய்வை முடித்துவிட்டு திரும்பிய போது, அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் அவ்விண்கலம்

வெடித்துச் சிதறியது. சாவ்லா உட்பட ஏழு பேரும் பலியாகினர்.

அ) விண்ணில் பயணித்தவர் எத்தனை பேர்?

ஆ) விண்கலத்தின் பெயர் என்ன?

இ) விண்கலம் எந்த ஆணடு செலுத்தப்பட்டது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2×3=6**

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

38. சோழ நாட்டில் மையுடையன, மருளுடையன யாவை?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"அருளைப் பெருக்கி" எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல்.

**(அல்லது)**

"சிறுதாம்பு தொடுத்த " எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

35 எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு -இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. 'எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்' அணி எது? சான்றுடன் விளக்குக.

37. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல்
- இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25**

38. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.

39. அ) உங்கள் ஊர் திருவிழாவில் நடைபெற்ற நிகழ்கலையை நீ கண்டு மகிழந்ததை உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் ‘உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்’ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.



41. மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்ப படிவம் ஒன்றை நிரப்புக.

42. அ) **குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.**

| குறிப்பு | எதிர்மறையானச் சொற்கள் |
|---|---|
| மீளாத் துயர் | |
| கொடுத்துச் சிவந்த | |
| மறைத்துக் காட்டு | |
| அருகில் அமர்க | |
| பெரியவரின் அமைதி | |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower's fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

ஆ) **நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.**

மகளிர் நாள் விழா

இடம் : பள்ளிக்கலையரங்கம்

நாள் : 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.

45. அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

மனித வாழ்வில் ஒவ்வொரு நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம். புதுப்புதுச் செய்திகள் கிட்டும் கிட்டுகிற கருப்பொருளைத் திரட்டி, கற்பனை நயம் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக,யாருமற்றவராக...... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.

**(அல்லது)**

ஆ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை, கட்டுரை, சிறுகதை கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

## விடைக் குறிப்புகள்

1. அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்
2. ஆ) இன்மையிலும் விருந்து
3. இ) அன்மொழித்தொகை
4. ஆ) விடைதர அவகாசம் வேண்டும்
5. இ) 583
6. இ) நெய்தல்
7. ஆ) இட்லிப்பூ
8. அ) பண்புத்தொகை
9. அ) உவமையை விட உருவகமே
10. அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
11. ஆ) இளையான்குடி மாறநாயனார், பெரியபுராணம்
12. இ) கனிச்சாறு
13. ஆ) பெருஞ்சித்திரனார்
14. அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
15. இ) பாண்டியன்
16. **சரியான தொடர்கள்:**

    ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

    ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

    **பிழையான தொடர்:**

    ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

    **பிழைக்கான காரணம்:**

    தாறு - வாழைக்குலை;

    சீப்பு - வாழைத் தாற்றின் பகுதி

    வாழைத்தாற்றில் பல சீப்புகள் உள்ளன என்றே கூற வேண்டும்.

17. இயந்திர மனிதன் (Robot-ரோபோ)
திறன்பேசி (Smart Phone)

18. மனவலிமை, குடிகளைக் காத்தல், விடாமுயற்சி, ஆட்சி முறைகளைக் கற்றல், விடாமுயற்சி.

19. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
அடிகளின் எண்ணிக்கை 103
ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.
முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.
பத்துப்பாட்டில் மிகக்குறைந்த அடிகளைக் கொண்ட நூல்.

20. அ) பத்துப்பாட்டில் மிகக்குறைந்த அடிகளைக் கொண்ட நூல் எது?
ஆ) முல்லைப்பாட்டைப் பாடியவர் யார்?

21. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

22. பெயர்ப் பயனிலை - கவிஞர்
வினைப் பயனிலை - சென்றார்
வினாப் பயனிலை - யார்?

23. **எ.கா:** "கத்துங் குயிலோசை என்றன் காதில் விழ வேண்டும்"-பாரதியார். (குயில் கூவும் - மரபு)
**காரணம்:** பாரதியார் இந்திய மக்களைச் சுதந்திரப் போராட்டத்திற்கு தட்டியெழுப்பும் வகையில் குயில் கத்தும் என்று கூறியதால் வழுவாயினும் மரபு வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

24. நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்கு கால் வலிக்கும் என்று இனிமேல் நேர்வதை விடையாகக் கூறுவது உறுவது கூறல் எனப்படும்.

25. அ) துணைத்தூதரகம்
ஆ) வணிகக்குழு

26. அ) பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

ஆ) இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

27. **பதிந்து** **- பதி + த் (ந்) + த் + உ**

**பதி** - பகுதி

**த்** - சந்தி (ந் - ஆனது விகாரம்)

**த்** - இறந்தகால இடைநிலை

**உ** - வினையெச்ச விகுதி

28. **எல் + பாடு - எற்பாடு**

**எல்** - சூரியன்

**பாடு** - மறையும் நேரம்

**பொருள்** - சூரியன் மறையும் நேரம்.

# மாதிரி வினாத்தாள் - 4

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி  மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. 'நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே' - என்று பெண்ணொருத்தி, தூது செல்ல காற்றினை அழைத்ததாகப் பாடியவர் ......................**

அ) ஔவையார்
ஆ) இளங்கோவடிகள்
இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்
ஈ) குமரகுருபரர்

**2. 'நறுவீ' என்பதில் 'வீ' என்பதன் பொருள் ......................**

அ) மலர்கள்  ஆ) மான்கள்
இ) விண்மீன்கள்  ஈ) கண்கள்

**3. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது -இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ......................**

அ) பாடிய கேட்டவர்  ஆ) பாடல் பாடிய
இ) கேட்டவர் பாடிய  ஈ) பாடல் கேட்டவர்

4. **2016 இல் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்த ஐ.பி.எம்.நிறுவனத்தின் கணினியின் பெயர்**

அ) வாட்சன் ஆ) வேர்டு ஸ்மித்

இ) ஸ்டீவ் ஸ்மித் ஈ) பெப்பர்

5. **குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே ......................**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ) இடவழுவமைதி , மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

6. **வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது**

அ) உறுவது கூறல் விடை

ஆ) உற்றது உறைத்தல் விடை

இ) இனமொழி விடை

ஈ) வினா எதிர் வினாதல் விடை

7. **இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ......................**

அ) நாட்டைக் கைப்பற்றல்

ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல்

ஈ) கோட்டையை முற்றுகையிடல்

8. **"வாகை" என்பது எதனைக் குறிக்கும்?**

அ) போர் ஆ) வெற்றி

இ) ஆநிரை மீட்டல் ஈ) மதில் வளைத்தல்

9. **பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும் பா வகை ......................**

அ) கலிவெண்பா ஆ) வஞ்சிப்பா

இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) இன்னிசை வெண்பா

**10. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி ......................**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்

இ) உருவகம் ஈ) தீவகம்

**11. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ......................**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம்

ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வனச் செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**

அ) மதுரைக்காஞ்சி ஆ) குறிஞ்சிப்பாட்டு

இ) நெடுநல்வாடை ஈ) காசிக்காண்டம்

**13. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) பரஞ்சோதி முனிவர்

ஆ) புகழேந்திப் புலவர்

இ) அதிவீரராம பாண்டியர்

ஈ) சேக்கிழார்

**14. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்கள் யாவை?**

அ) விருந்தினனாக, வியத்தல்

ஆ) திருந்துற, பொருந்து

இ) வழங்கல், வழிபடும்

ஈ) இனிதுரைத்தல், இருத்தல்

**15. ''வியத்தல்'' என்பதன் இலக்கணக்குறிப்பு**

அ) வேற்றுமைப் பெயர் ஆ) வினையாலணையும் பெயர்

இ) பண்புப்பெயர் ஈ) தொழிற்பெயர்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

அ) செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் ஆகும்.

ஆ) வானத்துத் தேவர்கள் ஆடும் ஆட்டம் தேவராட்டம் எனப்படும்.

17. 'காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' - உவமை உணர்த்தும் கருத்து யாது?

18. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.

19. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரியக் காரணமும் உண்டு! - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

20. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

21. ''விடல்'' - என முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**5×2=10**

22. **தொகைச்சொற்களை வகைப்படுத்துக.**
அன்புச் செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக்கொண்டிருந்தார்.

23. **கீழ்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**
(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர்கள் | சொல் | கூட்டப்பெயர்கள் |
|---|---|---|---|
| கல் | | | புல் |
| பழம் | | ஆடு | |

24. சொல்லில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க:
**முத்துப்பல்**

25. **கலைச்சொற்கள் தருக.**
அ) Symbolism
ஆ) Artifacts

26. **பின்வரும் தொடரைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க:**
கொஞ்சம் அதிகம்

27. **பொருத்தமான நிறுத்தற் குறியிடுக:**
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. ‘நின்று’ – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. மின்னணுப் புரட்சிக்கான காரணங்களைக் கூறுக.

30. சங்ககாலப் போர் அறம் குறித்து எழுதுக.

31. ஆந்திர மாநிலம் பிரியும் போது சென்னை அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று சில ஆந்திரத் தலைவர்கள் கருதினர். தலைநகரைக் காக்க தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் இராஜாஜி முன்வந்தார். மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு சென்னை பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டது. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கியதன் விளைவாக 25.08.1953 அன்று சென்னை தமிழருக்கே என்பது உறுதியானது என்று 'சென்னையை மீட்போம்' என்று சென்னையை மீட்டது குறித்து ம.பொ.சி குறிப்பிடுகிறார்.

    அ) முதலமைச்சர் பதவியைத் துறந்தவர் யார்?

    ஆ) யார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது?

    இ) எந்த ஆண்டு சென்னை தமிழருக்கு உறுதியானது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2×3=6**

32. 'காற்றே வா' என்னும் கவிதையில் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

33. "மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்'' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

"செம்பொனடி" எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்.

**(அல்லது)**

"மாற்றம் எனது " எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. இடைச்சொல் தொடர் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

36. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணி குறித்து எழுதுக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில், 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும்

பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40. **கவிதையைத் தொடர்க.**

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
______________________
______________________
______________________
______________________



41. **படிவத்தை நிரப்புக.**

நூலக உறுப்பினர் படிவம்.

42. அ) எந்தெந்த தாவரங்களின் அடிப்பகுதி என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகிறது எனப் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

Respected ladies and gentleman, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should proud about our culture. Thank you one and all.

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா?

இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுது.

**(அல்லது)**

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப் படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கின்றான்' சிறுகதையில் மனித நேயத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) 17ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்று உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால் - இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும், அதற்கு உண்டான தீர்வுகளையும் எழுது.

**(அல்லது)**

ஆ) உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் - சிறப்புமிக்கவர் - போற்றத்தக்கவர் - என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பானச் செய்திகளைத் தொகுத்து வழங்குக.

☯☯☯☯☯

## விடைக் குறிப்புகள்

1. இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்
2. அ) மலர்கள்
3. ஈ) பாடல் கேட்டவர்
4. ஈ) பெப்பர்
5. இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
6. அ) உறுவது கூறல் விடை
7. இ) வலிமையை நிலைநாட்டல்
8. ஆ) வெற்றி
9. அ) கலிவெண்பா
10. இ) உருவகம்
11. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
12. ஈ) காசிக்காண்டம்
13. இ) அதிவீரராம பாண்டியர்
14. அ) விருந்தினனாக, வியத்தல்
15. ஈ) தொழிற்பெயர்
16. அ) செயற்கை நுண்ணறிவு என்பது யாது?

    ஆ) தேவராட்டம் என்பது என்ன?
17. இளம்பயிரானது வளர்ந்து நெல்மணிகளைக்காணும்முன்பே, தூய மணி போன்று பெய்கின்ற மழைத்துளி இல்லாமல் வாடிக்காய்ந்து விட்டதைப் போல, கருணையனாகிய நானும் என் தாயை இழந்து வாடுகின்றேன்.
18. தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர்.
19. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு.

    நான் எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு.

20. கூத்தரே! தினைச் சோற்றைப் பெறுவீர்கள்.

21. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

22. **அன்புச்செல்வன்** திறன் பேசியில் **தொடுதிரை**யில் படித்துக்கொண்டிருந்தார்.

**அன்புச்செல்வன்** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**தொடுதிரை** – வினைத்தொகை

23. கல் குவியல் (கற்குவியல்) புல் கட்டு (புற்கட்டு)
பழம் குலை (பழக்குலை) ஆடு மந்தை (ஆட்டுமந்தை)

24. முத்துப்பல் – உவமைத்தொகை
மாலாவின் முத்துப்பல் மேலும் அவளுக்கு அழகு சேர்க்கிறது.

25. அ) குறியீட்டியல்
ஆ) கலைப் படைப்புகள்

26. **கொஞ்சம் அதிகம்** சங்ககாலத்தில் மன்னர்களுக்கு காதலும் வீரமும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.

27.
- சேரனின் பட்டப்பெயர்களில் 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை.
- 'கொல்லிமலை'யை வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. **நின்று** - **நில்(ன்) + ற் + உ**

**நில்** – பகுதி 'ல்' ன் ஆனது விகாரம்

**ற்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

# மாதிரி வினாத்தாள் - 5

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. உலகக் காற்று நாள் ......................**

அ) ஜூன் 15 ஆ) ஜூலை 15

இ) ஜனவரி 15 ஈ) டிசம்பர் 10

**2. பாடல்கள் பயன்படுத்தாத ஆட்ட வகை ......................**

அ) கரகம் ஆ) பொய்க்கால் குதிரை

இ) காவடி ஈ) மயில்

**3. 'பெரிய மீசை சிரித்தார்' இதில் 'பெரிய மீசை' என்னும் சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**4. சீனாவில் சிவன் கோவில் கட்டிய சீனப்பேரரசர் ......................**

அ) காண்டன் ஆ) சூவன்சௌ

இ) குப்லாய்கான் ஈ) பெய்ஜிங்

5. **"புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றொ" என்று யார் யாரிடம் கூறினார்?**
அ) இடைக்காடனார் இறைவனிடம்
ஆ) இறைவன் இடைக்காடனாரிடம்
இ) இறைவன் குசேல பாண்டியனிடம்
ஈ) குசேல பாண்டியன் இறைவனிடம்

6. **"ஆலத்து மேல குவளை குளத்துள வாலின் நெடிய குரங்கு" இவ்வரிகளில் அமையும் பொருள்கோள் எது?**
அ) கொண்டு கூட்டுப்பொருள்கோள்
ஆ) எதிர்நிரல்நிறை பொருள்கோள்
இ) முறை நிரல்நிறை பொருள்கோள்
ஈ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

7. **"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தோன்று உண்டாகச் செய்வான் வினை", இக்குறட்பாவில் பயின்று வரும் அணி யாது?**
அ) வஞ்சப்புகழ்ச்சி அணி
ஆ) உவமை அணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி
ஈ) ஏகதேச உருவக அணி

8. **சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .......................**
அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

9. **இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும் இவளின் கற்காலம் என்பது .......................**
அ) தலைவிதி ஆ) பழைய காலம்
இ) ஏழ்மையை தலையில் ஈ) கல் சுமப்பதை

10. **'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்,**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்'**
**- பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?**
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

**11. ‘‘கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் – குடக்கூத்து என்றும் கூறுவர்’’ இத்தொடருக்கான வினா ......................**

அ) கரகாட்டம் என்றால் என்ன?

ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை?

ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

‘‘அன்று அவன் அசைஇ அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரம் எனினே’’

**12. இப்பாடலின் ஆசிரியர் ......................**

அ) பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

ஆ) அதிவீரராம பாண்டியர்

இ) ராஜநாராயணன்

ஈ) சீவலமாறன்

**13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ......................**

அ) காசிக்காண்டம் ஆ) மலைபடுகடாம்

இ) பரிபாடல் ஈ) நற்றிணை

**14. கடும்பு என்பதன் பொருள் ......................**

அ) சுற்றம் ஆ) அருமை

இ) கூத்தர் ஈ) தினை

**15. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச்சொற்களை குறிப்பிடுக.**

அ) அன்று, கன்று ஆ) அலங்கு, சிலம்பு

இ) அன்று, அலங்கு ஈ) அன்று, அவன்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. **விடைகளுக்கு ஏற்ற வினா அமைக்க.**

    அ) நாம் இப்போது செயற்கை நுண்ணறிவு காலத்தில் இருக்கிறோம்.

    ஆ) கருத்தாழமும் வாசகர் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்.

17. பெற்றோர் வேலையிலிருந்து திரும்ப தாமதம் ஆகும் போது தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

18. ‘பெப்பர்’ என்பது என்ன?

19. வசன கவிதை – குறிப்பு வரைக.

20. பால்வீதி குறித்து எட்வின் ஹப்பிள் நிரூபித்துக் கூறிய செய்தியை எழுது.

21. ‘வினை’ என முடியும் திருக்குறள் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. குழந்தை அழுகிறான் பார்.– வழுவை வழாநிலையாக மாற்றுக.

23. **பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

    | துங்கும் – அவிலும் – கவிழும் – தயங்கும் |
    |---|

    அ) காலை ஒளியினில் மலரிதழ் ......................

    சோலை பூவினில் வண்டினம் ......................

    ஆ) மலைமுகட்டில் மேகம் ...................... அதை

    பார்க்கும் மனங்கள் செல்ல ......................

24. **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

“இயற்கை – செயற்கை”

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Classical Literature

ஆ) Land freeze

26. **கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

உழவர்கள் மலையில் உழுதனர்.

முல்லைப் பூச்செடியை பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

27. **பொருத்தமான நிறுத்தற்குறிகள் இடுக.**

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர் உறவினர் வேறு விருந்தினர் வேறு முன்பின் அறியாதப் புதியவர்களுக்கு விருந்தினர் என்று பெயர் விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்

28. “ஒலித்து” – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. மொழிபெயர்ப்பு சரியாக அமையவில்லை என்றால் என்ன நேரும் என்பதற்குச் சான்று தருக.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானது என்பதற்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.

31. **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சீனாவில் 50க்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் இயந்திர மனிதர்களை பணிக்கு அமர்த்தி உள்ளன. அவை அங்கு

வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன. சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும் கூட அவை புரிந்துகொண்டு பதிலளிக்கின்றன.

அ) இயந்திர மனிதன் என்பவன் யார்?

ஆ) இயந்திர மனிதன் எங்குப் பயன்படுத்தப்படுகிறான்?

இ) இவ்வுரைப் பத்திக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

32. "சித்தாளின் மனச் சுமைகள் செங்கற்கள் அறியாது"
– இடம் சுட்டி பொருள் தருக.

33. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"தென்னன் மகளே" எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடல்.

**(அல்லது)**

"வாளால் அறுத்துச் சுடினும்" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்ற மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள் போய் பார்" என்றார். 'இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து,

"என்னடா விளையாட வேண்டுமா?'' என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள், அவளிடம் நீயும் இவனும் விளையாடுங்கள்'' என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்து நீரைக் குடித்தாள்.

**இப்பத்தியிலுள்ள வழுக்களைத் திருத்தியும் வழுவமைதிகளைப் பட்டியலிட்டும் எழுது.**

36. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்
– இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு
– இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38. அ) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

**(அல்லது)**

ஆ) 'காற்றே வா' பாடலின் வாயிலாக பாரதியார் கூறும் செய்தியினை தொகுத்து எழுது.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின்விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) "மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பில், மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. மலர் என்பவர் கோவை மாவட்ட விளையாட்டு அலுவலகத்திற்குச் செல்கிறார். தடகள விளையாட்டு பயிற்சி உறுப்பினர் படிவத்தைப் பெற்று அதனை நிரப்புகிறார். தேர்வர் தம்மை மலராக நினைத்துக் கொண்டு தடகள விளையாட்டுப் பயிற்சி உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) **பாடலைப் படித்து பாடல் எழுந்த சூழலை எழுது.**

| பாடல் | எழுந்த சூழல் |
|---|---|
| பாடறியேன் படிப்பறியேன் – நான்தான்<br>பள்ளிக்கூடம் தானறியேன்<br>ஏடறியேன் எழுத்தறியேன் – நான்தான்<br>எழுத்துவகை தானறியேன்.<br>படிக்கா நல்லா தெரிஞ்சிருந்தா –<br>நான்தான்<br>பங்காளிய ஏன் தேடுறேன்<br>எழுத நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>எதிராளிய ஏன் தேடுறேன்<br>நாலெழுத்துப் படிச்சிருந்தா – நான்தான்<br>நாலு தேசம் போய்வருவேன்.<br>நாலு பக்கம் வரப்புக்குள்ளே – தெனமும்<br>நான் பாடுறேன் தெம்மாங்குதான். | |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature. The Marutham region was the fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

**(அல்லது)**

அ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறை கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.

44. அ) **ஒரு பக்க அளவில் உடையாடல் எழுதுக.**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

**(அல்லது)**

ஆ) சா. கந்தசாமியின் ‘பாய்ச்சல்’ கதையில் வரும் ‘அனுமார்’ என்ற கலைஞனின் கலைத்திறனை விளக்குக.

45. அ) மேடைக் கலைஞர்களுக்கும் பகல் வேடக் கலைஞர்களுக்கும் போட்டியாகத் திகழும் இக்கால சின்னத்திரை, திரைப்படம் வாயிலாக எதிர் கொள்ளும் இடர்பாடுகளைக் கண்டறிந்து கட்டுரை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக. (மழை, வெள்ளம், புயல், வறட்சி)

☯☯☯☯☯

## விடைக் குறிப்புகள்

1. அ) ஜூன் 15
2. ஆ) பொய்க்கால் குதிரை
3. இ) அன்மொழித் தொகை
4. இ) குப்லாய்கான்
5. ஈ) குசேல பாண்டியன் இறைவனிடம்
6. அ) கொண்டு கூட்டுப்பொருள்கோள்
7. ஆ) உவமை அணி
8. அ) அகவற்பா
9. ஈ) கல் சுமப்பது
10. ஆ) மோனை, எதுகை
11. ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
12. அ) பெருங்கௌசிகனார்
13. ஆ) மலைபடுகடாம்

14. அ) சுற்றம்

15. இ) அன்று, அலங்கு

16. அ) நாம் இப்போது எந்த காலத்தில் இருக்கிறோம்?

ஆ) ஜெயகாந்தனின் படைப்புகள் எவ்வாறு அமையும்?

17. தம்பி அழாதே! அப்பாவும் அம்மாவும் விரைவில் வந்து விடுவார்கள். வரும்போது உனக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொண்டு வருவார்கள்.

18.
- ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.
- இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
- வீட்டுக்கு, வணிகத்துக்குப், படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன.
- இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றன.
- பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

19. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும்.

20.
- அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறுதூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.

21. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்

றுண்டாகச் செய்வான் வினை.

22. குழந்தை அழுகிறது பார்.

23. அ) காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**.

சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**.

ஆ) மலை முகட்டில் மேகம் **தங்கும்**. அதைப்

பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**.

24. அ) இயற்கை – செயற்கை

பாதை தெரியாத இயற்கைக் காடுகளில் பயணிக்கச் செயற்கைக் கருவிகள் பயன்படுகின்றன.

25. அ) செவ்விலக்கியம்

ஆ) நிலக்காற்று

26. உழவர்கள் வயலில் உழுதனர்.

நெய்தல்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர். **(அல்லது)**

தாழைப்பூச் செடியைப் பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

27. விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

28. **ஒலித்து - ஒலி + த் + த் + உ**

**ஒலி** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – பெயரெச்ச விகுதி.

# ● மாதிரி வினாத்தாள் - 6 ●

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி                                                    மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்?**

அ) எந் + தமிழ் + நா        ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா        ஈ) எந்தம் + தமிழ் + நா

**2. செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**

**செய்தி 2 : காற்றாலை உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.**

**செய்தி 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.**

அ) செய்தி 1 மட்டும் சரி

ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி

ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

**3. பொருத்துக.**

1. விருந்தே புதுமை - அ) திருவள்ளுவர்
2. மோப்பக் குழையும் அனிச்சம் - ஆ) தொல்காப்பியர்
3. மருந்தே ஆயினும் விருந்தொடு உண் - இ) இளங்கோவடிகள்
4. விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை - ஈ) ஔவையார்

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ
இ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ

**4. புதிர்க்கான விடையை வரிசைப்படுத்துக.**

**பொய்கையிடம் போனால்**
**குளிர்ந்துபோகிறாய்**
**பூக்களைத் தொட்டால்**
**நறுமணத்தோடு வருகிறாய்**
**புல்லாங்குழலில் புகுந்தாய்**
**இசையாகி விடுகிறாய்**

அ) வலி, காற்று ஆ) வளி, மணம்
இ) வழி, மழை ஈ) வளி, காற்று

**5. இந்தியாவின் பெரிய வங்கி ......................**

அ) இந்தியன் வங்கி ஆ) பாரத் ஸ்டேட் வங்கி
இ) கனரா வங்கி ஈ) பரோடா வங்கி

**6. ‘புகழ்ந்தால்’ என்னுடல் புல்லரிக் காது ...................... இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது’ - இவ்வடிகளில் அமைந்த முரண் சொல்**

அ) என்னுடல் × என்மனம்
ஆ) புல்லரிக்காது × இறந்துவிடாது
இ) புகழ்ந்தால் × இகழ்ந்தால்
ஈ) புகழ்ந்தால் × என்மனம்

**7. திருபுவனச்சக்கரவர்த்தி என பட்டங்கள் பெற்றவன்**

அ) இரண்டாம் இராசராசன்

ஆ) குலோத்துங்கன்

இ) முதலாம் இராசராசன்

ஈ) விக்கிரமசோழன்

**8. விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் ......................**

அ) புகழேந்தி ஆ) செயங்கொண்டார்

இ) கம்பர் ஈ) ஒட்டக்கூத்தர்

**9. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ......................**

அ) 1978 ஆ) 1988 இ) 1972 ஈ) 1982

**10. பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ...................... ஆகும்.**

அ) ஆற்று நீர்ப் பொருள்கோள்

ஆ) நிரல் நிறைப் பொருள்கோள்

இ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

**11. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யார் யாரிடம் கூறியது?**

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்

ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி

ஈ) நோயாளியிடம் மருத்துவர்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட

வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை

ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**

அ) கலிங்கத்துப்பரணி

ஆ) நந்திக் கலம்பகம்

இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

ஈ) பெத்லகேம் குறவஞ்சி

**13. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) குமரகுருபரர் ஆ) திரிகூடராசப்பக் கவிராயர்

இ) ஒட்டக்கூத்தர் ஈ) செயங்கொண்டார்

**14. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்கள் யாவை?**

அ) கம்பி, கட்டிய ஆ) செம்பொன், பைம்பொன்

இ) பைம்பொன், பட்ட ஈ) திருவரை, திகழரை

**15. ''பண்டி'' சொல்லின் பொருள் ......................**

அ) முதுகு ஆ) வயிறு இ) நெற்றி ஈ) தலை

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. ''மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!'' - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

17. 'இலா' என்னும் மென்பொருள் குறித்து எழுதுக.

18. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'

கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

19. அறத்தையும் இன்பத்தையும் தருவது எது?

20. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

அ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

ஆ) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

21. 'விடும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலை மீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.

இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.

23. **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

அ) எழுகதிர்

ஆ) கீரிபாம்பு

24. **அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

அ) அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.
(படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக).

ஆ) குழந்தை அழுகிறான் பார்.
(வழுவை வழாநிலையாக மாற்றுக).

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Myth

ஆ) Artifacts

26. **பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

அ) வரப்போகிறேன்

ஆ) இல்லாமல் இருக்கிறது

27. ‘அறியேன்’ - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. **உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

அ) தாமரை இலை நீர் போல

ஆ) மழைமுகம் காணாப் பயிர்போல

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகளைக் கூறுக.

30. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுது.

31. மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய ‘இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்: சுள்ளி மலர், பாங்கர் மலர். அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் : அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா. பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை ‘கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப்பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய்

தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

**– கோவை. இளஞ்சேரன்.**

அ) 'மலர் உண்டு; பெயரும் உண்டு
- இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.

ஆ) குடிநீருக்கு மணம் தரும் மலர் எது?

இ) எந்த மரத்திலிருந்து அரிசி கிடைக்கும்?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

''விருந்தினனாக'' எனத்தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.

**(அல்லது)**

''தூசும் துகிரும்'' எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

35. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. 'கண்ணே கண்ணுறங்கு!

காலையில் நீயெழும்பு

மாமழை பெய்கையிலே

மாம்பூவே கண்ணுறங்கு!

பாடினேன் தாலாட்டு

ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!

இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

37. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளில் பயின்று வரும் அணியைக் கூறி விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38. அ) நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

**(அல்லது)**

ஆ) **சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொகுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டுக் கவி... தண்டலை மயில்கள் ஆட... இவ்வுரையைத் தொடர்க.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரியச் சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" - குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கி தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

40. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.



41. **படிவம் ஒன்றை நிரப்புக.**

மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம்

42. அ) **பழமொழிகளை நிறைவு செய்க.**

1. உப்பில்லாப் ....................
2. ஒரு பானை ....................
3. உப்பிட்டவரை ....................
4. விருந்தும் ....................
5. அளவுக்கு ....................

ஆ) **மொழிபெயர்க்க.**

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he

cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) தமிழின் இலக்கிய வளம் - கல்விமொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறை கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ) **ஒரு பக்க அளவில் உடையாடல் எழுதுக.**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

**(அல்லது)**

ஆ) 'ஒருவன் இருக்கின்றான்' சிறுகதையின் வாயிலாக உம் மனம் கவர்ந்த மனிதரின் மனித நேயத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "மரம் நடு விழாவுக்கு" வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர், பெற்றோர்க்கு பசுமைப் பாதுகாப்பு படைச் சார்பாக நன்றியுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## விடைக் குறிப்புகள்

1. இ) எம் + தமிழ் + நா
2. இ) செய்தி 3 மட்டும் சரி
3. அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
4. ஈ) வளி,காற்று
5. ஆ) பாரத் ஸ்டேட் வங்கி
6. இ) புகழ்ந்தால் × இகழ்ந்தால்
7. அ) இரண்டாம் இராசராசன்
8. இ) கம்பர்

9. ஆ) 1988
10. அ) ஆற்று நீர்ப் பொருள்கோள்
11. ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
12. இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
13. அ) குமரகுருபரர்
14. ஆ) செம்பொன், பைம்பொன்
15. ஆ) வயிறு
16. சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.
17. 
 - பாரத ஸ்டேட் வங்கி ‘இலா’ என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியுள்ளது.
 - ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.
 - அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.
18. 
 - கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கி விட்டது. அதைக் காண்பதற்கு எழுந்திடுவாய்.
 - வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையிலே படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.
19. முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்ந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் தரும். இன்பத்தையும் தரும்.
20. அ) ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

    ஆ) பா - எத்தனை வகைப்படும்?
21. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

    இன்மை புகுத்தி விடும்.
22. அழைக்கும் - அழைத்தல்<br>
    பார்ப்பேன் - பார்த்தல்<br>
    ஏறுவேன் - ஏறுதல்<br>
    எய்தும் - எய்தல்

23. அ) எழுகதிர் – வினைத்தொகை

மனித வாழ்வானது கிழக்கே தோன்றி மேற்கே மறையும் எழுகதிர் போன்றது.

ஆ) கீரிபாம்பு – உம்மைத்தொகை

கலாவும் மாலாவும் கீரியும் பாம்பும் போல எப்பொழுதும் பகைமையோடு வாழ்கின்றனர்.

24. அ) நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

ஆ) குழந்தை அழுகிறது பார்.

25. அ) தொன்மம்

ஆ) கலைப் படைப்புகள்

26. அ) வரப்போகிறேன்

என் நண்பன் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன் என்றான்.

ஆ) இல்லாமல் இருக்கிறது

எங்கள் நாடு பஞ்சம் இல்லாமல் இருக்கிறது.

27. **அறியேன் – அறி + ய் + ஆ + ஏன்**

**அறி** – பகுதி

**ய்** – உடன்படுமெய் சந்தி

**ஆ** – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது

**ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

28. அ) என் நண்பன் தாமரை இலைநீர் போல பட்டும் படாமலும் பழகுவான்.

ஆ) தாயை இழந்த கருணையன் மழை முகம் காணாப் பயிர்போல வாடினான்.

☯☯☯☯☯

# மாதிரி வினாத்தாள் - 7

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. தேம்பாவணியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை**

அ) 3656 ஆ) 3565

இ) 3613 ஈ) 3615

**2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?**

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.

ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

**3. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை**

அ) குலை வகை ஆ மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**4. 'மதுரை சென்றார்' - இத்தொடரில் அமைந்துள்ள வேற்றுமைத்தொகை எவ்வகை வேற்றுமைத் தொகைக்குப் பொருந்தும்?**

அ) மூன்றாம் வேற்றுமைத் தொகை
ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை
இ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை
ஈ) ஆறாம் வேற்றுமைத் தொகை

5. **கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**
அ) நல்ல உள்ளம் உள்ளவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

6. **சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண

7. **‘மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்’ மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ......................**
அ) திருப்பதியும் திருத்தணியும்
ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும்
ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

8. **‘தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்’ - என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்.**
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

9. **இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம் ......................**
அ) நாட்டைக்கைப்பற்றல்
ஆ) ஆநிரைகவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல்
ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**10. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ......................**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

**11. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ...................... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ......................**

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்

**12. இப்பாடல் அடிகள் இடம்பெற்ற நூல் எது?**

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) கம்பராமாயணம் ஈ) சீவகசிந்தாமணி

**13. இப்பாடலை இயற்றியவர் யார்?**

அ) கம்பர் ஆ) சீத்தலைச் சாத்தனார்
இ) திருத்தக்கத்தேவர் ஈ) இளங்கோவடிகள்

**14. பாடலில் பயின்ற எதுகைச் சொற்கள் ......................**

அ) தூசும், துகிரும் ஆ) வளம்தலை, நனந்தலை
இ) மணியும், பொன்னும் ஈ) தூசும், மாசுஅறு

**15. "தூசும்" என்பதன் பொருள் யாது?**

அ) பட்டு ஆ) குப்பை
இ) பவளம் ஈ) நறுமணம்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. **விடைக்கேற்ற வினா வினாக்கள் அமைக்க.**

அ) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தபட்டு வரும் கலையே தெருக்கூத்து என்பர்.

ஆ) 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'

17. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

18. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

19. மொழிபெயர்ப்பு எவ்வாறு அமைய வேண்டும்?

20. கரகாட்டம் என்றால் என்ன?

21. 'உலகு' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்குகளில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். -இத்தொடரை சொற்றொடராக மாற்றுக.

23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| |
|---|
| அவிழும், மரவீடு, கவிழும் |

அ) விரட்டாதீர்கள் - பறவைக்கு ..................
வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் ..................

ஆ) காலை ஒளியினில் மலரிதழ் .................. சோலைப் பூவினில் வண்டினம் ..................

24. **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

சிலை – சீலை

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Artifacts

ஆ) Myth

26. புறத்திணைகளில் ஏதேனும் இரண்டு எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

27. **பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறியிடுக.**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் – ம.பொ.சி.

28. ‘பதிந்து’ – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

29. மின்சோட்டா ‘வாழையிலை விருந்து விழா’ பற்றி எழுதுக.

30. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.





31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஜெயகாந்தனின் "தர்க்கத்திற்கு அப்பால்" கதையில் பிச்சை எடுக்கும் கண் தெரியாதவனும், தர்மம் செய்தவனுமே கதை மாந்தர்கள் ஆவர். ஜெயகாந்தன் தன்னிடமிருந்த ரூபாயில் இரயில் கட்டணத்திற்கு ஒதுக்கிவிட்டு காபி குடிக்கிறார். மீதமுள்ள இரண்டணாவை தர்மம் செய்கிறார். ஸ்டேஷனுக்குள் நுழையும்போது இரயில் கட்டணம் பதின்மூன்றணா என்று எண்ணி, யோசனை செய்கிறார். பிச்சைக்காரனுக்குப் போட்ட இரண்டணாவிலிருந்து ஓரணா எடுத்துக்கொள்ளலாம் என்று யோசிக்கிறார். அதன்படி, ஓரணாவைப் போட்டு விட்டு, இரண்டணா எடுக்கும்போது பிச்சைக்காரன் சாமி இதுதான் தர்மமா! குருடனை ஏமாற்றாதே! என்கிறார்.

அ) ஜெயகாந்தன் பிச்சைக்காரனுக்கு எவ்வளவு தர்மம் செய்கிறார்?

ஆ) இரயில் கட்டணம் எவ்வளவு?

இ) இவ்வுரை பத்தி ஜெயகாந்தனின் எக்கதையிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

33. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"வண்மையில்லை" எனத் தொடங்கும் கம்பராமாயணம் பாடல்.

**(அல்லது)**

"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. சிறுபொழுதிற்குரிய கூறுகள் எத்தனை? அவை யாவை?

36. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. சொற்பொருள் பின்வருநிலையணி குறித்து எழுதுக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) இடைக்காடன் பிணக்குத் தீர்த்த நிகழ்வையும் , புலவனுக்குச் சிறப்பு செய்ததையும் விளக்குக.

**(அல்லது)**


ஆ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

39. அ) பேருந்து நிலையத்தில் கிடந்த பணப்பையை காவல் நிலையத்தில் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டு பெற்று பத்திரிக்கைச் செய்தியாக வந்து மகிழ்ந்ததை பற்றி வெளியூரில் இருக்கும் நண்பருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் ஆண்டு மலரில் உம் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவினை பற்றி உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.



41. கணினி இயக்குநர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப்பட்டியல் ஒன்றை நிரப்புக.

42. அ) ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி வேண்டாவெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்.

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது. | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மகிழ்ச்சி! |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது. | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு! |
| | |

| | |
|---|---|
| | |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

1. Education is what remains after one has forgotten what one has learned in School. –*Albert Einstein*
2. Tomorrow is often the busiest day of the week. – *Spanish Proverb*
3. It is during our darkest moments that we must focus to see the light. – *Aristotle*
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – *Winston Churchill*
5. Man proposes,God disposes. – *Proverb*

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ‘மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்’ என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும்

ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

ஆ) சா. கந்தசாமியின் ‘பாய்ச்சல்’ கதையில் வரும் ‘அனுமார்’ என்ற கலைஞனின் கலைத்திறனை விளக்குக.

45. அ) நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக ஒரு கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) “அகநக நட்பதே நட்பு” - என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட கட்டுரை ஒன்று எழுதுக.

## விடைக் குறிப்புகள்

1. ஈ) 3615
2. இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
3. ஆ) மணி வகை
4. ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை
5. ஈ) அங்கு வறுமை இல்லாததால்
6. இ) உழவு, ஏர், மண், மாடு
7. அ) திருப்பதியும் திருத்தணியும்
8. ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்.
9. இ) வலிமையை நிலைநாட்டல்
10. ஈ) சிலப்பதிகாரம்

11. ஈ) மன்னன், இறைவன்
12. அ) சிலப்பதிகாரம்
13. ஈ) இளங்கோவடிகள்
14. ஈ) தூசும், மாசுஅறு
15. அ) பட்டு
16. அ) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தபட்டு வரும் கலை யாது?

    ஆ) எதை கொடுத்து தலைநகரைக் காப்போம்?
17. வெளியூர் சென்று வந்த பாவாணரிடம் அவரது நண்பர் பகலுணவும் இராவுணவும் எப்படி இருந்தது என்று கேட்டார். அதற்கு பாவாணர் பகலுணவு ‘பகல்’ உணவாகவும், இராவுணவு ‘இரா’ உணவாகவும் இருந்தது என்றார்.

    **பொருள்:**

    பகல் என்பதன் பொருள் - பகர்தல்

    பகல் உணவை அனைவரும் பகர்ந்து உண்டோம்.

    இரா என்பதன் பொருள் - இல்லை

    இரவு உணவு இன்றி அனைவரும் உறங்கினோம்

    - என சிலேடை விளங்கக் கூறினார்.
18. இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.
19. மொழிபெயர்ப்புகள் கழிவின்றி சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.
20. கரகம் என்னும் பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுதல்.
21. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்

    சுற்றமாச் சுற்றும் உலகு.

22. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்குகளில் அடுக்கி, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

23. அ) விரட்டாதீர்கள் - பறவைக்கு **மரம் வீடு**

வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் **மரவீடு**.

ஆ) காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**.

சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**.

24. சிலை - சீலை

சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தனர்.

25. அ) கலைப் படைப்புகள்

ஆ) தொன்மம்

26. அ) வெட்சித்திணை நிரை கவர்தல்

கரந்தைத்திணை நிரை மீட்டல்

ஆ) வஞ்சித்திணை வஞ்சிப்பூச் சூடி போருக்குச் செல்லுதல்.

காஞ்சித்திணை காஞ்சிப்பூச் சூடி எதிர்த்துப் போரிடல்.

27. பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.

28. **பதிந்து - பதி + த் (ந்) + த் + உ**

**பதி** - பகுதி

**த்** - சந்தி (ந் - ஆனது விகாரம்)

**த்** - இறந்தகால இடைநிலை

**உ** - வினையெச்ச விகுதி.

# மாதிரி வினாத்தாள் - 8

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. ''உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்''**
**- பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள்**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

**2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?**

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

**3. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்**

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**4. ''சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி'' என்னும் அடியில் பாக்கம் என்பது ......................**

அ) புத்தூர் ஆ) மூதூர்
இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. **மெய்க்கீர்த்திக்கு முன்னோடியாய்த் திகழும் சங்க இலக்கியப்பாடல்கள் ......................**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

இ) குறுந்தொகை ஈ) அகநானூறு

6. **முடக்கத்தான் (முடக்கொற்றான்) என்பது ......................**

அ) உழிஞைப் பூ ஆ) தும்பைப்பூ

இ) வெட்சிப்பூ ஈ) நொச்சிப்பூ

7 **'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' எனக் குறிப்பிடும் நூல் ......................**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

இ) பரிபாடல் ஈ) நற்றிணை

8. **சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ......................**

அ) அகவற்பா ஆ) வெண்பா

இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

9. **'தடக்கை' என்பதன் இலக்கணக்குறிப்பு ......................**

அ) தொழிற்பெயர் ஆ) உரிச்சொற்றொடர்

இ) வினைத்தொகை ஈ) பெயரெச்சம்

10. **சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ......................**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம்

ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

11. **கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று கூறும் நூல் எது? கூறியவர் யார்?**

அ) புறநானூறு, ஐயூர் முடவனார்

ஆ) ஆத்திச்சூடி, ஔவையார்

இ) கலித்தொகை, நல்லந்துவனார்

ஈ) புறநானூறு, மதுரை இளநாகனார்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**

அ) மதுரைக் காஞ்சி ஆ) குறிஞ்சிப்பாட்டு
இ) நெடுநல்வாடை ஈ) காசிக்காண்டம்

**13. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) பரஞ்சோதி முனிவர்
ஆ) புகழேந்திப் புலவர்
இ) அதிவீரராம பாண்டியர்
ஈ) சேக்கிழார்

**14. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்கள் யாவை?**

அ) விருந்தினனாக, வியத்தல்
ஆ) திருந்துற, பொருந்து
இ) வழங்கல், வழிபடும்
ஈ) இனிதுரைத்தல், இருத்தல்

**15. ''முகமன்'' என்பது ......................**

அ) விருந்தோம்பல் சொல்
ஆ) வசைபாடும் சொல்
இ) பழித்துப்பேசும் சொல்
ஈ) கேலிச் சொற்கள்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. ‘இறடிப் பொம்மல் பெறுகுவீர்’
    – தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
17. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
18. தேவராட்டம் என்றால் என்ன?
19. **‘நச்சப் படாதவன்’** செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.
20. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

    அ) நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலத்தில் வழிப்போக்கர்களுக்காக மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன.

    ஆ) பாடுவதற்குத் தகுதி உடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது பாடாண் திணையாகும்.
21. ‘கண்’ என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. தண்ணீர்க் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
23. **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

    அ) தொடு – தோடு

    ஆ) மடு – மாடு

24. **அகராதியில் கண்டு பொருள் எழுதுக.**

அ) ஊண், ஊன்

ஆ) திணை, தினை

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Ancient literature

ஆ) Regional literature

26. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் எப்பக்கம் இருக்கிறது? இதோ. இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

27. 'மலைந்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. **தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

அ) ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)

ஆ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

29. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக

நான்......... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ........... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

30. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். - இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

வீட்டிற்கு வந்த உறவினர்களிடம் வாருங்கள், அமருங்கள், நலமா? நீர் அருந்துங்கள், குடும்பத்தினர் அனைவரும் நலமா? என சில வார்த்தைகளைக் கூறி முகமலர்ச்சியுடன் விருந்தினரை வரவேற்றேன். வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு அறுசுவை உணவைத் தயார் செய்து அவரை உணவருந்த வருமாறு அழைத்தேன். தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது மரபு. ஆகவே தமிழ்ப் பண்பாடு மறையாதிருக்க தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவிட்டேன்.

அ) 'வீட்டிற்கு வரும் விருந்தினரை எவ்வாறு அழைப்பாய்?

ஆ) நா உணரும் சுவை எத்தனை?

இ) தமிழ்ப் பண்பாடு மறையாதிருக்க எந்த இலையில் உணவு பரிமாறினர்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

32. மகாகவி பாரதியார் குறிப்பு வகை.

33. 'பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்'
- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

''மாற்றம்'' எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

**(அல்லது)**

''வாளால்அறுத்து'' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல்

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

37. ஏகதேச உருவக அணியைக் கூறி விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

**(அல்லது)**


ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.

39. அ) புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியை மீட்பு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) உம் ஊருக்கு பேருந்து வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. **படிவத்தை நிரப்புக.**
நூலக உறுப்பின் படிவம்

42. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| |
|---|
| தங்கும், தரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து. |

1. விரட்டாதீர்கள் - பறவைக்கு .....................
வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் .....................
2. காலை ஒளியினில் மலரிதழ் .....................
சோலைப் பூவினில் வண்டினம் .....................
3. மலை முகட்டில் மேகம் ..................... அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் .....................
4. வாழ்க்கையில் ..................... மீண்டும் வெல்லும் -
இதைத் தத்துவமாய்த் ..................... கூத்து சொல்லும்.
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே ...................
- அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவே அவர் ................

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark.

The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion.

The cute butterflies dance around the flowers. The flower's fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

**(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) உலகம் பரந்து விரிந்த திடல்; அதில்ஆடுவாரும் உளர்; பிறதிறன் காட்டுவாரும் உளர்; இவர்களுள் வென்றாரே மிகுதி; இதனையே ஆளுமை என்கிறோம். அத்தகைய ஆளுமை மிக்க பெண்களைப் பற்றி கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

45. அ) **குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுது.**

அமைதி - வனம் - மனதைத் தொட்டது - கொஞ்சம் அச்சம் - ஆனால் பிடித்திருந்தது - இரவில் வீட்டின் அமைதியைவிட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில் - இலைகளின் சலசலப்பு - பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் – திடீரென ஆரவார ஓசை – தண்ணீரின் ஓட்டம் - அழகான ஆறு - உருண்ட சிறு கூழாங்கற்கள் - இயற்கையின் கண்காட்சி.

**(அல்லது)**

ஆ) பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக் கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தினைத் தொகுத்து அவை கூறும் அறச் செய்திகளை எழுதுக.

## விடைக் குறிப்புகள்

1. ஆ) மோனை, எதுகை
2. ஈ) இலா
3. இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
4. ஈ) சிற்றூர்
5. ஆ) பதிற்றுப்பத்து
6. அ) உழிஞைப் பூ
7. அ) புறநானூறு
8. அ) அகவற்பா
9. ஆ) உரிச்சொற்றொடர்
10. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
11. ஈ) புறநானூறு, மதுரை இளநாகனார்
12. ஈ) காசிக்காண்டம்

13. இ) அதிவீரராம பாண்டியர்

14. அ) விருந்தினனாக, வியத்தல்

15. அ) விருந்தோம்பல் சொல்

16. கூத்தரே! தினைச் சோற்றைப் பெறுவீர்கள்.

17. 
- நூல் வாங்குவதற்கு போதிய பணமில்லாத வறுமை நிலையிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் செல்வார்.
- விருப்பமான புத்தகங்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கும் வாடிக்கைக் கொண்டிருந்தார்.
- உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு பட்டினி கிடந்திருக்கிறார்.
- செவிவழியாகவும் இலக்கிய அறிவைப் பெற்றிருக்கிறார்.

18. வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்.

19. நச்சப் படாதவன் என்பதன் பொருள், பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர்.

20. அ) யாருடைய ஆட்சி காலத்தில் சத்திரங்கள் அதிகம் கட்டப்பட்டது?

ஆ) பாடாண் திணை விளக்குக?

21. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

22. **தண்ணீர் குடி**

தண்ணீரைக் குடி (இரண்டாம் வேற்றுமைத் தொகை)
மிகுந்த தாகத்தினால் தண்ணீரைக் குடித்தேன்.

**தயிர்க்குடம்**

தயிரை உடைய குடம் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை) கமலா தயிர்க்குடத்திலிருந்து தயிரை ஊற்றினாள்.

23. **தொடு - தோடு :** கலா பூக்களைத் தொடுத்து தலைப்பில் வைத்துக் கொண்டு காதுகளில் பெரிய தோடுகளை அணிந்தாள்.

**மடு - மாடு :** மடுவில் பால் கட்டியிருந்ததால் மாடு வலியால் துடித்தது.

24. அ) ஊண் - இரை, உண்டி, சோறு, உணவு, ஆன்மாவின் சுகதுக்கனுபவம்.

ஊன் - உடல், தசை, நிணம், மாமிசம், சரீரம்.

ஆ) திணை - இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள்

தினை - ஒரு சாமை (தானியம்), சிறுமை

25. அ) பண்டைய இலக்கியம்

ஆ) வட்டார இலக்கியம்

26. அ) மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? அறியா வினா

ஆ) இதோ.... இருக்கிறதே! - சுட்டு விடை

இ) சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? - ஐயவினா

27. **மலைந்து** - **மலை + த(ந்) + த் + உ**

| | |
|---|---|
| **மலை** | - பகுதி |
| **த்** | - சந்தி (ந் - ஆனது விகாரம்) |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **உ** | - வினையெச்ச விகுதி. |

28. அ) ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

ஆ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

# மாதிரி வினாத்தாள் - 9

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. **'களிஇயல் யானைக் கரிகால் வளவ!' என்று பாடியவர்**

அ) காக்கைப் பாடினியார்
ஆ) வெண்ணிக் குயத்தியார்
இ) வெள்ளி வீதியார்
ஈ) நப்பசலையார்

2. **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ......................**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

3. **எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?**

அ) கூவிளம் தேமா – மலர்
ஆ) கூவிளம் புளிமா – நாள்
இ) தேமா புளிமா – காசு
ஈ) புளிமா தேமா – பிறப்பு

4. **தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**தலைப்பு : செயற்கை நுண்ணறிவு**

**குறிப்பு : கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.**
**திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.**

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

5. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பு உணர்த்தும் செய்தி ......................**

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

6. **கம்பர் தாம் இயற்றிய காப்பித்திற்கு இட்ட பெயர்**

அ) இராமகாதை ஆ) இராமாயணம்

இ) கம்பராமாயணம் ஈ) இராமாவதாரம்

7. **ஜெயகாந்தனின் சோவியத் நாட்டு விருது பெற்ற நூல்**

அ) உன்னைப்போல் ஒருவன்

ஆ) சில நேரங்களில் சில மனிதர்கள்

இ) யுகசந்தி

ஈ) குறுபீடம்

8. **தேவதுந்துபி என்னும் இசைக்கருவி பயன்படுத்தும் ஆட்ட வகை .......................**

அ) கரகாட்டம் ஆ) மயிலாட்டம்

இ) தேவராட்டம் ஈ) சேவையாட்டம்

9. **'செறிந்த' - என்பதன் இலக்கணக்குறிப்பு .......................**

அ) தொழிபெயர் ஆ) உரிச்சொற்றொடர்

இ) வினைத்தொகை ஈ) பெயரெச்சம்

10. **பிள்ளைத்தமிழில் இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் .......................**

அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 10

11. **பொருத்துக.**

1. தற்குறிப்பேற்றவணி - அ) ஒரு சொல் பல இடங்களில் உள்ள சொற்களோடு பொருள் கொள்ளல்
2. தீவக அணி - ஆ) சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்திப் பொருள் கொள்ளல்
3. நிரல் நிறை அணி - இ) உண்மையான இயல்புத் தன்மை
4. தன்மையணி - ஈ) கவிஞனின் குறிப்பேற்றல்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவல் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்'' என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**

அ) காசிக்காண்டம் ஆ) மலைபடுகடாம்

இ) கனிச்சாறு ஈ) முல்லைப்பாட்டு

**13. இப்பாடல் ஆசிரியர் யார்?**

அ) நப்பூதனார் ஆ) முன்றுரையரையனார்

இ) கணிமேதாவியார் ஈ) நத்தத்தனார்

**14. ''உறுதுயர்'' - இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**15. பாடலில் வந்துள்ள அடிஎதுகைச் சொற்கள் ......................**

அ) சிறுதாம்பு, உறுதுயர் ஆ) நடுங்கு, கொடுங்கோற்

இ) இன்னே, நன்னர் ஈ) இவை மூன்றும்

**பகுதி - II (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

17. 'வேர்டுஸ்மித்' குறிப்பு வரைக.

18. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரைலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

19. **பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

| | |
|---|---|
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | உயிரினும் ஓம்பப் படும் |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |

20. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) மொழி என்பது உலகின் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவி காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.

ஆ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர்.

21. 'தரும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. அப்படியானால் 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

23. **பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

சேரனின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

24. **மரபுத் தொடருக்கான பொருள் அறிந்து தொடர் அமைக்க.**

அ) மனக்கோட்டை:

ஆ) கண்ணும் கருத்தும்:

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Humanism

ஆ) Cultural Boundaries

26. **அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| வேர்ச்சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | | சொல்லிச் சென்றார் | | |

27. 'மயங்கிய' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். – இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள்கள் கருப்பொருளை எழுதுக.

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களையும் அதற்குரிய தாவரங்களின் பெயர்களையும் எழுது.

30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

31. சீன நாட்டில் 'காண்டன்' நகருக்கு 500 கல் வடக்கே சூவன்செள என்னும் துறைமுக நகர் உள்ளது. வணிகத்திற்காகத் தமிழர்கள் அடிக்கடி சூவன்செள நகருக்குச் சென்றதால் சிவன் கோவில் ஒன்று அங்கே கட்டப்பட்டது.

சீன பேரரசரான குப்லாய்கானின் ஆணையின் கீழ் சிவன் கோவில் கட்டப்பட்டது என்பதற்கான தமிழ்க் கல்வெட்டு அங்குள்ளது. இக்கோயிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அ) சூவன்செள என்னும் துறைமுக நகர் எங்கு உள்ளது?

ஆ) யாருடைய ஆணையின் கீழ் சிவன் கோவில் கட்டப்பட்டது?

இ) தமிழர்கள் எதற்காக சீனாவிற்குச் சென்றனர்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

32. முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல், கரு, உரிப்பொருள்களை எழுது.

33. சிலப்பதிகாரம் - குறிப்பு வரைக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

“செம்பொனடி” எனத்தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்.

(அல்லது)

“பூக்கையைக்” எனத்தொடங்கும் தேம்பாவணி பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப் படுத்துக.

37. உவமை அணியைக் கூறி விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) சித்தாளின் மனச்சுமையாக நாகூர் ரூமி கூறும் செய்தியைத் தொகுத்து எழுதுக.

39. அ) மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியை மீட்பு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) உம் ஊருக்கு நூலக வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. **படிவத்தை நிரப்புக.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்ப படிவம்.

42. **எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

| **செய்யுள் அடி** | **எண்ணுப்பெயர்** | **தமிழ் எண்** |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | | |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | | |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | | |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | | |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி | | |

ஆ) **மொழிபெயர்க்க.**

Malar : Devi, switch off the lights when you leave the room.

Devi : Yeah, we have to save electricity.

Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar : I have read some other countries are going to lunch these types of illumination satellites near future.

Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** **3×8=24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்து தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44. அ) துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது எப்படிபட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை கு. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' கதை வாயிலாக விளக்குக.

**(அல்லது)**

ஆ) கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
– என்கிறது வெற்றிவேற்கை.
மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடர் ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) கருந்துளை சார்ந்த செய்தியை அறிவியல் இதழ் ஒன்றிற்குக் குறுங்கட்டுரையாக எழுது.

**(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

## விடைக் குறிப்புகள்

1. ஆ) வெண்ணிக்குயத்தியார்
2. அ) வேற்றுமை உருபு
3. அ) கூவிளம் தேமா மலர்
4. அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
5. அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
6. ஈ) இராமாவதாரம்
7. அ) உன்னைப்போல் ஒருவன்
8. இ) தேவராட்டம்
9. ஈ) பெயரெச்சம்
10. ஆ) 7
11. ஆ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ
12. ஈ) முல்லைப்பாட்டு
13. அ) நப்பூதனார்
14. ஆ) வினைத்தொகை
15. இ) இன்னே, நன்னர்
16. தம்பி அழாதே! அப்பாவும் அம்மாவும் விரைவில் வந்து விடுவார்கள். வரும்போது உனக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொண்டு வருவார்கள்.
17. • இதழியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித். இதற்கு எழுத்தாளி என்று பெயர்.
    • இதில் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்; சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்குகின்றன.

18. **கருத்து : 1**

‘ ‘வெறுங்கை முழம் போடுமா?’’ என்ற பழமொழியைக் கூறியவர்களும் நம்முன்னோரே. ஆகவே, விருந்தோம்பலுக்கு செல்வம் இன்றியமையாதது.

**கருத்து : 2**

“மனமிருந்தால் மார்க்கம் உண்டு’’ என்ற பழமொழிக்கேற்ப விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்ற மனநிலை இருந்தால் மட்டுமே வறுமையிலும் விதைக்காக வைத்திருந்த தானியத்தைக் குற்றி உணவளிக்க முடியும்.

19.

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். | உயிரினும் ஓம்பப்படும் |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

20. அ) உலகின் போட்டி போராட்டத்திற்கு காரணமாக விளங்குவது எது?

ஆ) கி.வா. ஜகந்நாதன் எதற்காக எந்த வண்டியில் இறங்கினார்?

21. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

22. சிரித்து சிரித்துப் பேசினாள். உவகை காரணமாக அடுக்குத்தொடராயிற்று.

23. சேரனின் பட்டப்பெயர்களில் ‘கொல்லி வெற்பன்’, ‘மலையமான்’ போன்றவை குறிப்பிடத்தக்கவை. ‘கொல்லிமலை’யை வென்றவன் ‘கொல்லி வெற்பன்’ எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள்

'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

24. அ) மனக்கோட்டை: படிக்காமலே தேர்வில் வெற்றி பெற்றுவிடலாம் என்று சில மாணவர்கள் கட்டுகிறார்கள்.

ஆ) கண்ணும் கருத்தாய் கவனமுடன் படித்தால் முதல் மதிப்பெண் பெறலாம்.

25. அ) மனித நேயம்

ஆ) பண்பாட்டு எல்லை

26. சொன்ன அம்மா

அம்மா நில்!

கதையைச் சொன்னார்

27. **மயங்கிய - மயங்கு** + **இ(ன்)** + **ய்** + **அ**

**மயங்கு** – பகுதி 'ல்' ன் ஆனது விகாரம்

**இன்** – இறந்கால இடைநிலை

**ய்** – உடம்படுமெய் சந்தி

**அ** – பெயரெச்ச விடுதி

28. **முதற் பொருள்:**

நிலம் – காடு – முல்லை

பொழுது – பெரும்பொழுது – கார்காலம்

சிறுபொழுது – மாலை

**கருப்பொருள் :**

உணவு – வரகு

# மாதிரி வினாத்தாள் - 10

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி                                             மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. சம்பா நெல்லின் உள் வகைகள் எத்தனை?**

அ) 30    ஆ) 60    இ) 40    ஈ) 80

**2. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ......................**

அ) வணிகக் கப்பல்களும், ஐம்பெருங் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும், பெரும் கலன்களும்

இ) ஐம்பெருங் காப்பியங்களும், அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும், அணிகலன்களும்

**3. மலர்கள் தரையில் நழுவும், எப்போது?**

அ) அள்ளி முகர்ந்தால்

ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால்

ஈ) காம்பு முறிந்தால்

**4. விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் ......................**

அ) புகழேந்தி    ஆ) செயங்கொண்டார்

இ) கம்பர்    ஈ) ஒட்டக்கூத்தர்

**5. பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும் பா வகை**

அ) கலிவெண்பா ஆ) வஞ்சிப்பா

இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) இன்னிசை வெண்பா

**6. பொருத்திக் காட்டுக.**

i) குறிஞ்சி - கார்காலம்

ii) முல்லை - குளிர்காலம், முன்பனிக்காலம்

iii) மருதம் - இளவேனில், முதுவேனில், பின்பனி

iv) பாலை - ஆறு பெரும்பொழுதுகள்

**7. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன். இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது?**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

**8 ‘‘நான் மட்டுமே தண்டனை பெற்று நரகம் சேர்வேன். மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும் – என்று கூறியவர்?**

அ) இராமானுசர் ஆ) பூரணர்

இ) கூரேசர் ஈ) முதலியாண்டான்

**9. இசைக்குக் கிடைத்த மகுடம் எனப் போற்றப்பட்ட விருது**

அ) நோபல் பரிசு ஆ) தாமரை விருது

இ) மகசேசே விருது ஈ) இந்தியமாமணி விருது

**10. ‘‘மீட்சி விண்ணப்பம்’’ கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்**

அ) வேணுராம் ஆ) வேணுகோபாலன்

இ) சி.சு. செல்லப்பா ஈ) கபிலன்

**11. நேரடி விடைகளாக இருக்கும் வெளிப்படை விடைகள் எத்தனை?**

அ) மூன்று ஆ) நான்கு

இ) ஐந்து ஈ) ஆறு

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**

அ) காசிக்காண்டம் ஆ) மலைபடுகடாம்
இ) கனிச்சாறு ஈ) திருவிளையாடற் புராணம்

**13. இப்பாடல் ஆசிரியர் யார்?**

அ) பரஞ்சோதிமுனிவர் ஆ) முன்றுரையரையனார்
இ) கணிமேதாவியார் ஈ) நத்தத்தனார்

**14. இப்பாடல் வரி யார் கூற்றாக அமைந்துள்ளது?**

அ) மன்னன்,அமைச்சர் ஆ) மன்னன்,புலவர்
இ) மன்னன்,இறைவன் ஈ) புலவன் , மன்னன்

**15. 'நுவன்ற' என்ற சொல்லின் பொருள் ......................**

அ) உறுதுயர் ஆ) நடுங்கு
இ) நுகர்தல் ஈ) சொல்லிய

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?
17. ஓசோன் படலத்தின் பயன்களைக் கூறு.
18. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

19. முதுபெண்டிர் விரிச்சி கேட்டு தலைவிக்குக் கூறிய செய்தி யாது?

20. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) விருந்து பற்றி எடுத்துரைக்கும் சங்கஇலக்கிய நூல்கள் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை.

ஆ) வேப்பமாலை அணிந்த குசேலபாண்டியன். தமிழறியும் பெருமான், அடியார்க்கு நல்நிதி போன்றவன்.

21. 'உலகு' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23. **நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.
2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன. மொட்டின் வருகை.

24. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்கமாட்டான்'' என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.

- இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Monolingual

ஆ) Conversation

26. **கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

அ) விதி - வீதி

27. 'தணிந்தது' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. **சொற்களைப் பிரித்துப் பொருள் தருக.**

அ) கானடை

ஆ) வருந்தாமரை

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. இடம்பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதைச் சான்றுடன் விவரிக்க.

30. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார்.

- இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

31. தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.உலகின் பிற ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிறமொழி அறியா. தமிழனும் அச்சிந்தனைகள் குறித்து அறிந்துகொள்ள முடியும். மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. ஆகவே மொழியின் மூலம் கலாச்சாரத்தை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை. மக்களிடையே பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை

குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.

அ) தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

ஆ) கலாச்சாரத்தின் வழிகாட்டியாக அமைவது எது?

இ) தமிழின் இனிமை எப்போது குறையும்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

32. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

33. மருதம் எவ்வாறு வீற்றிருக்கிறது என்று கம்பர் வருணனை செய்கிறார்?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

''புண்ணியப்'' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்.

(அல்லது)

''செம்பொனடிச்சிறு'' எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்

- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

37. வஞ்சப் புகழ்ச்சி அணியைக் கூறி விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

**(அல்லது)**

ஆ) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) உம் ஊரில் நடைபெற்ற கோயில் திருவிழா நிகழ்ச்சியை தினசரி நாளிதழில் வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) உம் ஊருக்கு பேருந்து வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. **படிவத்தை நிரப்புக.**

நூலக உறுப்பினர் சேர்க்கைப் படிவம்

42. அ) நாம் வாழ்வில் இதுகாறும் கற்ற அறங்கள் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் செய்ய வேண்டிய அறங்கள் எவை அவற்றால் ஏற்படும் நன்மைகள் எவை எவையென பட்டியலை நிறைவு செய்க.

| நாம் செய்ய வேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம். எதிரியையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | |
| | |

ஆ) **மொழிபெயர்க்க.**

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he

cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24**

43. அ) விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் குறித்து காசிக்காண்டம் குறிப்பிடும் செய்தி யாது?

**(அல்லது)**

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ) ஒரு பக்க அளவில் உடையாடல் எழுதுக.

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடல் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) அனுமார் ஆட்டம் குறித்து பாய்ச்சல் கதையின் வாயிலாக சா. கந்தசாமி கூறுவன யாவை?

45. அ) குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுது.

அமைதி - வனம் - மனத்தைத் தொட்டது - கொஞ்சம் அச்சம் - ஆனால் பிடித்திருந்தது - இரவில் வீட்டின் அமைதியைவிட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில் - இலைகளின் சலசலப்பு - பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் - திடீரென ஆரவார ஓசை - தண்ணீரின் ஓட்டம் - அழகான ஆறு - உருண்ட சிறு கூழாங்கற்கள் - இயற்கையின் கண்காட்சி.

**(அல்லது)**

ஆ) பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "மரம் நடு விழாவுக்கு" வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர், பெற்றோர்க்கு பசுமைப் பாதுகாப்பு படை சார்பாக நன்றியுரை எழுதுக.

## விடைக் குறிப்புகள்

1. ஆ) 60
2. அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்
3. அ) அள்ளி முகர்ந்தால்
4. இ) கம்பர்
5. அ) கலிவெண்பா
6. அ) 2, 1, 4, 3
7. ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.
8. அ) இராமானுசர்
9. இ) மகசேசே விருது
10. ஆ) வேணுகோபாலன்
11. அ) மூன்று
12. ஈ) திருவிளையாடற் புராணம்
13. அ) பரஞ்சோதிமுனிவர்
14. ஆ) மன்னன், புலவர்
15. ஈ) சொல்லிய
16. இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.
17. கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கிறது. புவியைப் போர்வை போலச் சுற்றி கதிரவனின் வெப்பத்தைக் குறைத்துக் கொடுக்கிறது.
18.
    - காலக் கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிப்பது ஆகும்.
    - வயது முதிர்ந்து உடலும் உடல் உறுப்புகளும் வலுவிழந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்.

- வாளித்தண்ணீர், சாயக்குவளை, துணி கந்தையானாலும், சாயம் அடிக்கும் தூரிகை.
- கட்டையானாலும் சுத்தம் செய்வது போல, காலக்கழுதை கட்டெறும்பான பின்னும் அறப்பணி ஓயாது தொடர்கிறது.

19. • சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.
- புல்லை மேய்ந்த உன் தாயாரை வளைந்த கத்தியுடைய கம்பைக் கொண்ட எம் இடையர். இப்போது ஓட்டி வந்துவிடுவர் வருந்தாதே என்றாள் இடைமகள்.

20. அ) விருந்து பற்றி எடுத்துரைக்கும் சங்கஇலக்கிய நூல்கள் யாவை?

ஆ) குசேலபாண்டியனின் பண்பு நலன்கள் யாவை?

21. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

22. வேங்கை : வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும் (தனிமொழி)

**வேம்** + **கை :** வேகின்ற கை எனவும் பொருள் தருகிறது (தொடர்மொழி)

23. அ) காற்றின் பாடல்

ஆ) மொட்டின் வருகை.

24. சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்கும். புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிர கடிக்காது.

25. அ) ஒரு மொழி

ஆ) உரையாடல்

26. விதி – வீதி
கண்ணனின் தலைவிதி அவனை வீதியில் நிறுத்தியது.

27. **தணிந்தது - தணி** + **த் (ந்)** + **த்** + **அ** + **து**

**தணி** - பகுதி

**த்** - சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**த்** - இறந்தகால இடைநிலை

**அ** - சாரியை

**து** - படர்க்கை வினைமுற்று விகுதி

28. அ) **கானடை : கான் அடை - காட்டைச் சேர்**

கான் நடை - காட்டுக்கு நடத்தல்

கால் நடை - காலால் நடத்தல்

ஆ) **வருந்தாமரை: வரும் தாமரை - தாமரை மலர்**

வரும் தா மரை - தாவும் மான் வருகிறது

வருந்தா மரை - துன்புறாத மான்

# மாதிரி வினாத்தாள் - 11

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.　　　　　　　　**15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்?**

அ) உதியன் : சேரலாதன்
ஆ) அதியன் : பெருஞ்சாத்தன்
இ) பேகன் : கிள்ளிவளவன்
ஈ) நெடுஞ்செழியன் திருமுடிக்காரி

**2. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்?**

அ) திருமூலர்　　　　　　ஆ) அகத்தியர்
இ) வள்ளுவர்　　　　　　ஈ) தொல்காப்பியர்

**3. 'தொங்கான்' என்பது குறிப்பது எதைக் குறிக்கிறது?**

அ) தலைமை மாலுமி　　　ஆ) கப்பல்
இ) புயல்　　　　　　　　ஈ) பயணி

4. **பின்வருவனவற்றுள் முறையான தொடர் ......................**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

5. **அல்கி என்பதன் பொருள் ......................**

அ) அழிந்து ஆ) தங்கி

இ) உள்ளே ஈ) வெளியே

6. **'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தவர் ......................**

அ) ராகுல் சாங்கிருத்யாயன் ஆ) சசிதேவ்

இ) கணமுத்தையா ஈ) வெ. ஸ்ரீராம்

7. **வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது ......................**

அ) உறுவது கூறல் விடை

ஆ) உற்றது உறைத்தல் விடை

இ) இனமொழி விடை

ஈ) வினா எதிர் வினாதல் விடை

8. **'மேன்மை தரும் அறம்' என்பது ......................**

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

9. **'நன்மொழி' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு**

அ) வினையாலணையும் பெயர்

ஆ) தொழிற்பெயர்

இ) வினைத்தொகை

ஈ) பண்புத்தொகை

10. **சாகித்ய அகாதெமி விருது பெற்ற ம.பொ.சியின் நூல் ......................**

அ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு

ஆ) மனுமுறை கண்ட வாசகம்

இ) எனது போராட்டம்

ஈ) வானம் வசப்படும்

11. **'உழுபவருக்கே நில உரிமை இயக்கம்' தொடங்கியவர் ......................**

அ) ராஜம்கிருஷ்ணன் ஆ) கிருஷ்ணம்மாள்

இ) பாலசரசுவதி ஈ) எம்.எஸ்.சுப்புலட்சமி

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.**

பூக்கையைக் குவித்துப் பூவே
புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான் மீதே.

12. **இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**

அ) பெரிய திருமடல் ஆ) தேம்பாவணி

இ) தேவாரம் ஈ) திருவாசகம்

**13. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) திருமங்கை ஆழ்வார் ஆ) ஆண்டாள்

இ) நம்மாழ்வார் ஈ) வீரமாமுனிவர்

**14. 'கணீர்' என்பதன் இலக்கணக்குறிப்பு?**

அ) பண்புத்தொகை

ஆ) வினையாலணையும் பெயர்

இ) இடைக்குறை

ஈ) பெயரெச்சம்

**15. சேக்கை – என்பதன் பொருள் யாது?**

அ) உடல் ஆ) கட்டி

இ) படுக்கை ஈ) பயன்

**பகுதி - II (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.4×2=8**

16. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தப் பிறகு நோபல் பரிசு கிடைத்தது.

ஆ) தமிழர்களின் மிகப்பழமையான மரபுவழிக் கலைகளில் ஒன்று பொம்மலாட்டம்.

17. சிலேடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

18. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்? ஏன்?

19. ம.பொ.சி. சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியக் காரணம் என்ன?

20. 'உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'
– இத்தொடரின் பொருள் ஆழத்தை விளக்குக.

21. 'செயல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**5×2=10**

22. **குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.**

அ) சுவைக்காத இளநீர்

ஆ) காப்பியச் சுவை

23. **சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

அ) நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும்.

ஆ) ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்.

24. **வண்ணச் சொற்களின் தொடர் வகைகளை எழுது.**

அ) **பழகப் பழகப்** பாலும் புளிக்கும்.

ஆ) **வடித்த கஞ்சியில்** சீலையை அலசினேன்.

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) Cosmic Rays

ஆ) Ultraviolet Rays

26. பாடாண் திணையை விளக்குக.

27. **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

அ) கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.

ஆ) குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

28. வருக – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

29. • புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.
    • திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.
    • இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

30. சங்ககாலப் போர் அறம் குறித்து எழுதுக.

31. பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறித்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

    அ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

    ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

    இ) பெய்த மழை
    – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2×3=6**

32. பால்வீதிகள் கண்டுபிடிப்பில், "எட்வின் ஹப்பிளுக்கு முன்னோடி மாணிக்கவாசகர்" என்பதை நிரூபிக்க.

38. 'அலுக்காமல் இவள் சுமக்கும் கற்களெல்லாம்
அடுத்தவேளை உணவுக்காக'
- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"விருந்தினனாக" எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.

**(அல்லது)**

"சிறுதாம்பு தொடுத்த " எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6**

35. வெண்பாவின் பொது இலக்கணத்தை விளக்குக.

36. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு
-இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை
- இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

**(அல்லது)**

ஆ) 'கயமை' என்றும் அதிகாரத்தில் கயவர் குறித்து வள்ளுவர் குறிப்பிடும் செய்தி யாது?

39. நம் ஊரில் அனைத்து மக்களுக்கும் ஏற்ற வகையில் நூலகம் ஒன்றினை அமைத்து தருமாறு நூலக இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.

**(அல்லது)**

ஆ) பள்ளித் திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை எழுதுக.



41. படிவம் ஒன்றை நிரப்புக.
மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பப் படிவம்.

42. அ) **கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.**

| கவிச்சக்கரவர்த்தியும் | கவியரசும் |
|---|---|
| நதியின் பிழையன்று<br>நறும்புனலின்மை அன்றே<br>பதியின் பிழையன்று<br>பயந்த நம்மைப் புரந்தான்<br>மதியின் பிழையன்று<br>மகன் பிழையன்று மைந்த<br>விதியின் பிழை நீ<br>இதற்கென்னை<br>வெகுண்டதென்றன்<br>**– கம்பன்** | நதிவெள்ளம் காய்ந்து<br>விட்டால்<br>நதிசெய்த குற்றம் இல்லை<br>விதிசெய்த குற்றம் இன்றி<br>வேறு – யாரம்மா!<br>**– கண்ணதாசன்** |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

Respected ladies and gentleman, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have difined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should proud about our culture. Thank you one and all.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3×8=24

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறை கருத்துகள் - தமிழுக்குச் செழுமை.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும்.

எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "மரம் நடு விழாவுக்கு" வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர், பெற்றோர்க்கு பசுமைப் பாதுகாப்பு படை சார்பாக நன்றியுரை எழுதுக.

## விடைக் குறிப்புகள்

1. ஆ) அதியன் : பெருஞ்சாத்தன்
2. ஈ) தொல்காப்பியர்
3. ஆ) கப்பல்
4. இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
5. ஆ) தங்கி
6. இ) கணமுத்தையா
7. அ) உறுவது கூறல் விடை
8. அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
9. ஈ) பண்புத்தொகை
10. அ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு
11. ஆ) கிருஷ்ணம்மாள்
12. ஆ) தேம்பாவணி

13. ஈ) வீரமாமுனிவர்

14. இ) இடைக்குறை

15. இ) படுக்கை

16. அ) ரவீந்திரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலியை எந்த மொழியில் மொழிபெயர்த்தப் பிறகு நோபல் பரிசு கிடைத்தது?

ஆ) தமிழர்களின் மிகப்பழமையான மரபுவழிக் கலை எது?

17. சிலேடை இரண்டு வகைப்படும். அவை:

- செம்மொழிச் சிலேடை
- பிரிமொழிச் சிலேடை

18. குற்றம் கண்டபோது இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன் தன்னைக் கெடுக்க பகைவர் இல்லை எனினும் தானே கெட்டழிவான்.

19. சிலப்பதிகாரம் தமிழினத்தின் பொதுச்சொத்து. இந்திய தேசிய ஒருமைப்பாட்டையும், தமிழ் இனத்தை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு உண்டான செய்திகள் அனைத்தும் சிலப்பதிகாரத்தில் காணப்பட்டதால் மக்களிடையே சிலப்பதிகாரத்தைக் கொண்டுச் சென்றார்.

20. ஒருவர் தன் வாயால் புகழ்வதும் இகழ்வதும் நம் உடம்பின் மீது வந்து சேராது.

21. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

22. அ) சுவைக்காத இளநீர்: மன்னன் சுவைக்காத இளநீர் உண்டோ?

ஆ) காப்பியச் சுவை: கம்பர் காலத்தில் காப்பியச் சுவை உச்சநிலையில் இருந்ததோ?

23. அ) விண்மீன்

ஆ) காடு

24. அ) அடுக்குத்தொடர்

ஆ) பெயரெச்சத் தொடர்

25. அ) விண்வெளிக் கதிர்கள்

ஆ) புற ஊதாக் கதிர்கள்

26. **பாடு + ஆண் + திணை** எனப் பிரிக்கப்படும்.

பாடப்படும் ஆண்மகனது, கல்வி, வீரம், செல்வம், புகழ், ஈகை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது. போரை மட்டும் சொல்லாது ஒருவரின் பிற மாண்புகளையும் குறிப்பிடுவதே பாடாண் திணையாகும்.

27. அ) நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் உதவும் கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

ஆ) படைப்புத்திறன் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

28. **வருக – வா(வரு) + க**

**வா** – பகுதி (வரு எனக் குறுகியது விகாரம்)

**க** – வியங்கோள் வினைமுற்று விகுதி.

☯☯☯☯☯

குறிப்பு

☯☯☯☯☯